பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

புதன்கிழமை 25 ஜூன் 2025 | ஆனி 11 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056 | சுடர் : 40 கதிர் : 210

புதன்பொய்கை

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

**பரிபூரணம்**


சேவையை நாம் எம மககளுககாக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35000/- ற்கு இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம். உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2695 / 0774290613

# யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகிறார் வோல்கர் ட்ரக்!

## தமிழ்க் கட்சியினருடன் சந்திப்பு புதைகுழியையும் பார்க்கத் திட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 25

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகைதரவுள்ளார். வடமாகாண ஆளுநர் மற்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடத்தவுள்ள அவர், யாழ்ப்பாணம் – செம்மணிப் புதைகுழியையும் பார்வையிடுவார் என்று தெரியவருகின்றது.

15

## யாழ்ப்பாணத்தில் நேற்று எரிபொருள் வரிசை மாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணத்தில் எரிபொருளுக்காக ஏற்பட்டிருந்த வரிசைகள் நேற்று நண்பகலுக்குப் பின்னர் முற்றாக இல்லாமற்போயுள்ளன. மத்திய கிழக்கில் ஏற்பட்டிருந்த போரைத் தொடர்ந்து யாழ்ப்பணம் மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடந்த சில நாள்களாக எரிபொருள் வரிசைகள் ஏற்பட

15

## புதைகுழிகளுக்கு நீதிகோரி செம்மணியில் இன்று போர்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

செம்மணி மனிதப் புதைகுழி உள்ளிட்ட வடக்கு - கிழக்கில் அவதானிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகளுக்கு நீதிகோரியும், இனப்படுகொலைகளுக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட

15

## செம்மணிப் புதைகுழி விவகாரம்

## அகழ்வுப் பணிகளுக்கு விடுவிக்கப்பட்டது நிதி!

### நாளை அகழ்வு ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வுக்கான பாதீடு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அதற்கான நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழிகள் தொடர்பான வழக்கு, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று

15

## முச்சந்தி முரளி

'புதைகுழியைப் பாக்கிறது முக்கியமில்லை. புதைக்கப்பட்டவைக்கு நீதி கிடைக்க ஏதும் வழிசெய்வாரோ?'

## தீயில் எரிந்து முதியவர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 25

மெழுகுதிரி தவறிவீழ்ந்து தீப்பற்றியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - அராலிப் பகுதியைச் சேர்ந்த அம்பலவாணர் நாகேந்திரம்

15

தமிழரசுக் கட்சியின்

## பதில் பொதுச்செயலராக தற்போதும் சத்தியலிங்கமே

### நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கூற்றில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளராக ப.சத்தியலிங்கம் தற்போதும் தொடர்கின்றார் என்று கட்சியின் பதில் தலைவரான சி.வீ.கே.சிவஞானம் நீதிமன்றத்துக்கு சத்தியக்கூற்றை வழங்கியுள்ளார். மட்டக்களப்பைச் சேர்ந்த

15

## வலி. வடக்குக் காணிகளை உடன் விடுவிக்கவேண்டும்

### காணி உறுதிகளுடன் மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 2 ஆயிரத்து 400 ஏக்கர் காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி, காணிகளின்

15

## மன்னார் நகரசபையில் சங்கு ஆட்சியமைப்பு!



மன்னார், ஜூன் 25

மன்னார் நகரசபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ளது. தவிசாளராக அந்தக் கட்சியின் டானியல்

15

## மாந்தை மேற்குப் பிரதேசசபை: கைப்பற்றியது சங்குக் கூட்டணி



மன்னார், ஜூன் 25

மாந்தை மேற்கு பிரதேசசபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ளது. தவிசாளராக ஞானப்பிரகாசம்

15

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மன்னார் பிரதேசசபையில் வெற்றி


### தவிசாளரானார் ஏ.ஜே.எம்.ஜப்ரான்



மன்னார், ஜூன் 25

மன்னார் பிரதேசசபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆட்சியமைத்துள்ளது. இதன்படி தவிசாளராக ஏ.ஜே.எம்.

15



அசோக் TMT

அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

ashok STEEL
நீடித்த வலிமை

மத்திய மாகாணம் - 0773825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் டொன் இற்கு ரூ. 232,000 + VAT

375



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | ஹந்தஹரண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 24.06.2025 | திகதி 24.06.2025 | திகதி 24.06.2025 | திகதி 24.06.2025 | திகதி 24.06.2025 | திகதி 24.06.2025 | திகதி 24.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4112 | சீட்டிழுப்பு இலக்கம் 1179 | சீட்டிழுப்பு இலக்கம் 0138 | சீட்டிழுப்பு இலக்கம் 2218 | சீட்டிழுப்பு இலக்கம் 5870 | சீட்டிழுப்பு இலக்கம் 1900 | சீட்டிழுப்பு இலக்கம் 0445 |
| ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கினம் தும்பம் | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து K | ஆங்கில எழுத்து M | ஆங்கில எழுத்து G | ஆங்கில எழுத்து M |
| | | | சுப்பர் இலக்கம் 03 | | | |
| வெற்றி இலக்கங்கள் 32 53 64 78 | வெற்றி இலக்கங்கள் 27 51 56 62 | வெற்றி இலக்கங்கள் 5 6 8 4 | வெற்றி இலக்கங்கள் 24 39 41 57 | வெற்றி இலக்கங்கள் 7 1 8 3 6 4 | வெற்றி இலக்கங்கள் 19 28 45 72 | வெற்றி இலக்கங்கள் 8 3 6 4 |
| விசேட எழுத்து Q | | | | | விசேட எழுத்து G | |

# பயங்கரவாதத் தடைச்சட்டம் 3 மாதங்களில் நீக்கப்படும்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜீன் 25**
**பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் மூன்று மாத காலப்பகுதிக்குள் நீக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.**

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. நீதி அமைச்சர் தலைமையில் இந்த விவகாரத்தைக் கையாள்வதற்குக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. மூன்று மாத காலப்பகுதிக்குள் இந்தச் சட்டத்தை நீக்கமுடியும். அதேபோல் திட்டமிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் புதிய சட்டமொன்றும் அவசியம். அதற்குரிய ஏற்பாடும் இடம்பெற்றுவருகின்றது. அரசியல் பழிவாங்கல் நோக்கில் தடுத்துவைத்தல் உள்ளிட்ட விடயங்கள் நீக்கப்படும். ஜனநாயக வழிமுறைகளுக்கமைய புதிய சட்டம் அமையும் -என்றார். (எ-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 24.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் 0578 |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 2 0 2 2 9 2 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி 24.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2844 | ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 20 34 57 72 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 24.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 13 52 59 63 | வெற்றி வாரம் 5005 |

| SASIRI | |
|---|---|
| திகதி 24.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் 0711 | வெற்றி இலக்கம் 02 14 32 |


| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 24.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் 09 13 32 56 | சீட்டிழுப்பு வாரம் 4556 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 24.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து H | சுப்பர் இலக்கம் 18 | வெற்றி இலக்கம் 15 27 49 55 | வெற்றி வாரம் 2020 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 24.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கம் 19 20 22 71 | வெற்றி வாரம் 2670 |

# கனடாவுக்கு பிரதமர்

கொழும்பு, ஜுன் 25
பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று செவ்வாய்க்கிழமை காலை கனடாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.
அங்கு பொதுநலவாயக் கற்கைகள் நிர்வாகசபையில் பங்கேற்கவுள்ளார்.
பொதுநலவாயக் கற்கைகள் நிர்வாகசபை நேற்றுமுதல் நாளை வரை கனடாவின் வான்கூவரில் நடைபெறுகின்றது.
புதுமை மற்றும் ஆராய்ச்சியில் முதலீடு, நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் டிஜிற்றல் மாற்றத்தை ஆதரித்தல், பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் திட்டத்தைச் செயற்படுத்துதல் தொடர்பிலும் அங்கு கலந்துரையாடப்படவுள்ளன. (ச-இ)



# அணையாவிளக்குக்கு ஆதரவாக மட்டக்களப்பிலும் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஜுன் 25
செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரும் அணையா விளக்குப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் மட்டக்களப்புக் கோட்டைக்கல்லாறு ஒந்தாச்சிமடம் பாலத்தில் நேற்றுமுன்தினம் மாலை தீப்பந்தம் ஏந்திய போராட்டம் நடைபெற்றது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது. பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் பேரணியாக நடந்து சென்று, பாலத்தின் நடுப்பகுதியில் ஆர்ப்பாட்டம்

# அம்பாந்தோட்டை மாநகரசபை ஐ. ம. சக்தி வசம்

கொழும்பு, ஜுன் 25
நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை பெற்றிருந்த அம்பாந்தோட்டை மாநகரசபையில் ஐக்கிய மக்கள் சக்தி மேயர் பதவியைப் பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.
அம்பாந்தோட்டை மாநகரசபையின் முதலாவது அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் டி.ஏ.காமினி அதிகளவான வாக்குகளைப் பெற்று அம்பாந்தோட்டை மாநகரசபையின் புதிய மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார். (ச-இ)

# 2 தொன் போதைப்பொருள் கடந்த 5 மாதங்களில் மீட்பு

கொழும்பு, ஜுன் 25
கடந்த 5 மாதங்களில் 2 தொன் ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.
சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.
அதற்கமைய, இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 253 கிலோகிராம் ஹெராய்ன், 2ஆயிரத்து 121 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருள், 12 ஆயிரத்து 439 கிலோகிராம் கஞ்சா, 22 கிலோகிராம் கொக்கேய்ன், 1.6 மில்லியன் போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# தேசிய மக்கள் சக்தியிடம் மாத்தளை மாநகரசபை



மாத்தளை, ஜுன் 25
மாத்தளை மாநகரசபையின் மேயராகத் தேசிய மக்கள் சக்தியின் அசோக கொட்டச்சி தெரிவாகியுள்ளார்.
சபையின் பிரதி மேயராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் எம்.மோகன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
மாத்தளை மாநகரசபையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இன்மையால், மத்திய மாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் சமிலா அதபத்துவின் தலைமையில் மேயர் மற்றும் பிரதி மேயரைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று இடம்பெற்றது.
வாக்களிப்பு ஆரம்பமானதையடுத்து, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட 10 உறுப்பினர்கள் வாக்களிப்பைப் புறக்கணித்து, அங்கிருந்து வெளியேறினர்.
அதன்பின்னர் உள்ளூராட்சிசபை ஆணையாளர் வாக்கெடுப்பை நடத்தினார். இதன்போது மேயர் மற்றும் பிரதி மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மாத்தளை மாநகரசபையில் தேசிய மக்கள் சக்தி கட்சி 10 உறுப்பினர்களை வென்றிருந்தது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை அடகு சேவை
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது
1 பவுண் 22 கரட்டிற்கு
220000/-
அடகுக்காலம் ஒரு வருடம்
இல. 59 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தைக்கு அருகில்
021 221 7287, 076 636 1238

# ‘அணையாவிளக்கு’ போராட்டம் பொறுப்புக்கூறலுக்கான திருப்புமுனை

தமிழ் சிவில் சமூக அமையம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 25

**அணையாவிளக்குப் போராட்டம் உண்மையான பொறுப்புக்கூறலின் தேவையை நினைவூட்டுவதற்கான சந்தர்ப்பமாகும். செம்மணியில் அண்மைக்காலத்தில் புதிதாக அகழப்பட்ட மனிதப்புதைகுழிகளை முறையாக அகழ்வு செய்யவேண்டும் எனக்கோரி மூன்று நாள்கள் ‘அணையாவிளக்கு’ என்ற பெயரில் நடைபெறுகின்ற போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம் என்று தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அந்த அமையம் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில்,

16 வருடங்களாக தமிழ் மக்களுடைய பொறுப்புக்கூறலுக்கான போராட்டத்தில் செம்மணிப் புதைகுழிகள் அண்மையில் மீளக் கண்டறியப்பட்டதும் அதன் அகழ்வின்போது பல மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் ஒரு திருப்புமுனையாக அமைகின்றது.

பொறுப்புக்கூறலுக்கான தேவையையும், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலையைப் புரிந்தவர்கள் நீதியின் முன்னால் கொண்டு நிறுத்தப்படவேண்டிய தேவையையும், பொறுப்புக்கூறல் தொடர்பிலான தமிழ் மக்களுடைய அவாவினையும் குறித்த மனிதப் புதைகுழிகள் மீள ஞாபகமூட்டுகின்றன. மனிதப் புதைகுழி அகழ்வின்போது சர்வதேச பங்குபற்றலும், சர்வதேசக் கண்காணிப்பும், சர்வதேச உள்ளீடும் இருப்பது அவசியம்.

இலங்கைக்கு விஜயம் செய்கின்ற ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தனது கவனத்திற்கொண்டு இது தொடர்பிலான தனது பரிந்துரைகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

இறந்தவர்களுடைய நினைவுக்கும், இறந்தவர்கள்மீது எங்களுக்கு உள்ள மரியாதையையும், அந்த இறப்புக்கான காரணங்களைத் தேடி அறிவதற்கான எமது தொடர் பொறுப்புக்கூறலுக்கான போராட்டத்தையும் உறுதிப்படுத்தும்வகையில் இந்தப் போராட்டத்தில் பெருமளவில் நாம் இணைந்துகொள்ள வேண்டும்- என்றுள்ளது. (ச)



## கதிர்காமக் கந்தனுக்கு நாளை கொடியேற்றம்

கொழும்பு, ஜுன் 25

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் ஆலயத் திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜுலை 11 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. (ச-இ)

# எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் சேமிப்பு அவசியம்

யாழ்ப்பாணம், ஜுன் 25

எரிபொருள்கள் போதியளவு கையிருப்பிலுள்ளதால் எரிபொருள் விற்பனைநிலையங்கள் எரிபொருள்களைச் சேமித்துவைத்திருக்கவேண்டும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நுகர்வோருக்குத் தட்டுப்பாடின்றி எரிபொருள்களை விநியோகிக்கும் முகமாக இந்த அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது.

எரிபொருள் விற்பனைநிலையங்கள் எரிபொருளுக்கான கட்டளைகளை உடனுக்குடன் தாமதமின்றி விண்ணப்பிக்கவேண்டும். எரிபொருள் கட்டளைகளுக்கு ஏற்ப எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப் பட்டுவருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-ர)




# ‘குடி’ இருந்த கோயிலில்...!

கோயில் இல்லா ஊரில குடியிருக்கவேண்டாமெண்டு சொன்னது அந்தக்காலம். கோயிலுக்கு வாறதெண்டால் குடிச்சிட்டு வராதையுங்கோ எண்டு கெஞ்சவேண்டியிருக்கு இந்தக் காலத்தில. அவ்வளவுக்குக் கோயில் எண்டாலே சாமி நினைவுக்கு வரமுதலே அங்க நடக்கிற தடியடிச்சண்டை சச்சரவுதான் கண்ணுக்கு முன்னுக்கு வந்து நிக்குது. அதிலையும் இரவுத் திருவிழாக்கள் எண்டால் சொல்லவே தேவையில்லை. சண்டை நடக்காட்டித்தான் அதிசயம் எண்டளவுக்கு நிலைமை மாறிப் போட்டுது.

முந்தநாள் புதூர் நாகதம்பிரானில நடந்த பொங்கலிலையும் இப்பிடி ரண்டு பெடியள் குரூப்புக்கு இடையில பெரும் தடியடி. நேற்று பேஸ்புக்கில இஸ்ரேலுக்கு ஈரான் அடிச்ச ஏவுகணையளின்ர வீடியோவை விட்டிட்டு, புதூர் நாகதம்பிரானில உந்தக் காவலி விடுகாலியள் தடி பொல்லுகளால அடிபட்ட வீடியோதான் கடும் ஓட்டம். பாம்பை அடிக்கக்கூட தடியெடுக்கக் கூடாதெண்டுற அளவுக்குக் கட்டுப்பாடுகள் இருக்கிற புதுமையள் நிறைஞ்ச புதூர் நாகதம்பிரான்ர புனிதத்தையே கெடுக்கிறமாதிரி இந்தப் ‘புள்ளிங்கோ கும்பல்காரர்’ அட்டகாசம் செய்திருக்கினம். வருசத்தில ஒருக்காத்தான் புதூர் நாகதம்பிரானுக்குப் பொங்கல் நடக்கிறது. அந்தப் பொங்கலுக்கெண்டே நேர்த்தி எல்லாம் வைச்சு, வெளிமாவட்டங்களில இருந்தெல்லாம் நாகதம்பிரானைக் கும்பிடுறதுக்காக ஆக்கள் ஆயிரக்கணக்கில வண்டில் கட்டிக்கொண்டு வருவினம். இரவிரவா கோயிலிலயே நிண்டு பொங்கல் எல்லாம் முடிச்சு விடியத்தான் வெளிக்கிடுவினம். அவையின்ர சொந்தபந்தங்களைக் கோயிலில கண்டு சுகம் விசாரிச்சு, விடிய விடிய பழங்கதையள் எல்லாம் கதைச்சு, சாமி கும்பிட்டு, அன்னதானம் சாப்பிட்டு, மணிக்கடையளில - விரும்பினவைக்கு- விரும்பினதை வாங்கிக் குடுத்து எண்டு அந்தநாள் பக்தியும், சந்தோசமுமாக் கழியும்.

ஆனால் இந்தமுறை என்னடாவெண்டால், உந்தக் கழிசறையளின்ர சண்டையால கனபேர் இரவோட இரவா அங்க இருந்து வெளிக்கிட்டிட்டினம். துஷ்டனைக் கண்டால் தூர விலகிறதுதான் புத்திசாலித்தனம். இப்பிடிக் கண்மண் தெரியாமல் உவங்கள் அடிபடேக்க மாறிச்சாறி பக்கத்தில நிக்கிறவைக்கும் அடி விழக்கூடும். அதோட இப்பிடிப் பதகளிப்பட்டுக்கொண்டு சாமியையும் ஒழுங்காக் கும்பிடேலாது. அதாலதான் கனபேர் பொங்கலைப் பார்க்காமலே வீட்டுக்கு வெளிக்கிட்டிட்டினம். கோயிலுக்கு வாறதுக்கெண்டு முறைதலை இருக்கு. முந்தி மச்சம் சாப்பிட்டாலே கோயில் பக்கம் எட்டியும் பாக்கமாட்டினம். இப்ப அப்பிடியில்லையே. சாராயம், கசிப்பு, கஞ்சா அடிச்சுப்போட்டுத்தான் அரைவாசிப் பெடியள் கோயிலுக்கு வருகினம். அவை சும்மா இருக்க நினைச்சாலும், அவை அடிச்ச கசிப்பும், கஞ்சாவும் சும்மா இருக்க விடாமல் சண்டையை வில்லங்கத்துக்கு விலைகுடுத்து வாங்கத்தான் நிக்குங்கள். புளியம்பொக்கணையிலும் இப்பிடிக் கஞ்சா, கசிப்பை அடிச்சுப்போட்டுத்தான் கனபேர் கோயில் வீதியில விலாசம் காட்டிக்கொண்டு திரிஞ்சவை. புதூரில இன்னும் ஒருபடி மேலபோய், தடிபொல்லுகளால கொழுவுப்பட்டு இருக்கினம். இனிமேல் கோயில் திருவிழாக்களில கட்டாயம் பொலிஸ்காரரை ஆயுதங்களோட நிக்கவைக்கோணும், அப்பதான் உப்பிடி கோயிலுக்கு கும்பிட வராமல் சண்டித்தனத்துக்கு வாறவைக்கு ஆப்படிக்கலாம். அதைவிடப் புதுமையான புதூர் நாகதம்பிரான் தன்ர கோயில் பொங்கலில உப்பிடி எளியவேலை செய்தவையைப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியம் சாதகமாகமுடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண்செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டாலும், விரைவில் சரியாகிவிடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**கடகம்:** புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்துமகிழும்வாய்ப்புஏற்படும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால்மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்குமேல்பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைக் காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம்எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வெளியூரில் இருந்துவரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானத்துடன் செயற்படுவது அவசியம். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவுசெய்வீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்குப் பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.


**தனுசு:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ளநேரிடும். பிள்ளைகளால்மகிழ்ச்சி உண்டாகும். கணவன்மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிற்பகலுக்குமேல்மற்றவர்களுடன்பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள்ஏற்படும். வாழ்க்கைத்துணைவழிஉறவுகள் உதவிகேட்டுவருவார்கள்.





வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் கைலாச வாகனத்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வெகுசிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. இதன்போது அடியவர்கள் புடைசூழ மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய கைலாச வாகனத்தில் கந்தப்பெருமான் வீதி உலா வந்தார். (ச-22,66)

# யாழ்.பல்கலை சட்டத்துறையின் 20ஆவது வருட விசேட நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டு 20ஆண்டுகள் நிறைவையொட்டி விசேட நிகழ்வொன்று யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ், கௌரவ விருந்தினராக சட்டத்தரணி மாலா சபாரத்தினம், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி பி.என். தம்பு, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தொடர்பான ஆவணப்படம் வெளியிடப்படும்.

தொடர்ந்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய, இலங்கை சட்டக்கல்லூரி அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்தலால் டி அல்வீஸ், சட்டத்தரணி எல். இளங்கோவன், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து, சட்டத்தரணி எர்மிசா டெகல், சட்டத்தரணி லக்ஸ்மனன் ஜெயகுமார் ஆகியோர் பங்கேற்கும் குழு விவாதம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி நிஸாந்தவின் நெறியாள்கையில் நடைபெறும். (ச-41-20)



# மருத்துவர் இடமாற்றம்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 12 ஆண்டுகளாக என்புமுறிவு சத்திரசிகிச்சை நிபுணராகக் கடமையாற்றிய மருத்துவர் ரி. கோபிசங்கர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார். இவர் இலங்கை என்பு முறிவுச் சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் தலைவராகவும், பல்வேறு அமைப்புகளின் ஆலோசகராகவும் செயற்பட்டுவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22,66)

கிளிநொச்சி மருத்துவமனையில்



# செயற்கைக் கருத்தரிப்பு செயற்பாடுகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையின் பெண்ணோயியல் பிரிவு நிலையத்தின் செயற்கைக் கருத்தரிப்பு ஆய்வுகூடத்தின் செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டன.

நெதர்லாந்து அரசின் 5 ஆயிரத்து 320 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பெண்ணோயியல் சிகிச்சை நிலையத்தின் செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் நீண்டகாலம் செயற்படாது காணப்பட்டது. இந்தநிலையில் வடமாகாண ஆளுநரின் முயற்சியைத் தொடர்ந்து குறித்த செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. (ச-41-13)

# இலத்திரனியல் வெள்ளைப்பிரம்பு வவு. மாணவர்களால் அறிமுகம்

வவுனியா, ஜூன் 25



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் கண்பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் வெள்ளைப் பிரம்பை இலத்திரனியல் முறையில் மேம்படுத்தி அறிமுகம் செய்துள்ளனர். தமது புத்தாக்கம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனைச் சந்தித்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தெரியப்படுத்தினர்.

கண்பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் வெள்ளைப்பிரம்பை இலத்திரனியல் உபகரணங்களைக்கொண்டு பல்வேறுபட்ட வசதிகளை மேம்படுத்தி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்வகையில் இந்தக் கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்புத் தொடர்பில் கண்மருத்துவ சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர். மு.மலரவன் தெரிவிக்கையில், வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலுக்கமைய மாணவர்களின் கண்டுபிடிப்பைப் பதிவுசெய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு உதவத் தயார் - என்றார். இவ்விரு மாணவர்களையும் வாழ்த்திய ஆளுநர், புத்தாக்கக் கண்டுபிடிப்புகள் எமது மாணவர்கள் மத்தியிலிருந்து மேலும் தோற்றம் பெறவேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ச-41-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

அழகைப் பற்றி கனவு காணாதீர்கள். அது உங்கள் கனவைப் பாழாக்கிவிடும்

- அப்துல்கலாம் -

# காலமறிந்து செயலாற்றுக...!

வடக்கில் உள்ள உள்ளூராட்சிசபைகளில் சிலவற்றைத்தவிர ஏனைய அனைத்து சபைகளிலும் ஆட்சி அமைக்கப்பட்டுவிட்டது. கடந்த காலங்களைவிடவும் இம்முறை உள்ளூராட்சிசபைகளின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு தமிழ்க் கட்சிகள் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தன. கட்சிகளுடன் பகிரங்க - இரகசியப் பேச்சுகள், சபை உறுப்பினர்களை வளைத்தல், கூட்டணிப் பேச்சுகள் எனக் கடந்த சிலவாரங்கள் பரப்பாக இருந்த வடக்கு அரசியல் இப்போது மெல்ல இயல்புக்குத் திரும்பியிருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ்மக்கள் தங்கள் வாக்குகளால் சொன்ன செய்தி, தமிழ்க்கட்சிகளிடையே மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. முக்கியமாக நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளுக்கு ஏற்பட்டிருந்த பின்னடைவு, உள்ளூராட்சித் தேர்தலில் ஒற்றுமையைநோக்கி அவற்றை உந்தித்தள்ளியிருந்தது. இத்தனை காலமும் பிரிவுகளுக்கு முன்வைத்த காரணங்கள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டு, தமிழ்க்கட்சிகள் சில தேர்தல் கூட்டுகளை உள்ளூராட்சித் தேர்தலில் தோற்றுவித்திருந்தன. சில கட்சிகள் தனித்தும் தேர்தலைச் சந்தித்திருந்தன. தமிழ்க் கட்சிகள் அரசியல் கூட்டணிக்குக் காரணங்கள் பலவற்றைக் கூறினாலும், கடந்த தேர்தல்களில் விழுந்த அடியே அதற்குக் காரணம் என்பது பரகசியமானது. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் வீசிய தேசிய மக்கள் சக்தி அலை, உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வீசவில்லை. அதற்குத் தாங்கள் வகுத்த அரசியல்வியூகமேகாரணம்என்றுதமிழ்க்கட்சிகள் நம்பக்கூடும். ஆனால் தமிழ்க்கட்சிகளுக்குத் தமிழ் மக்கள் வழங்கியுள்ள ஓர் இறுதிச் சந்தர்ப்பம் என்றே கருதமுடியும். கடந்த காலங்களில் தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் அரசியல் இலாபத்துக்காகவும், கதிரைகளுக்காகவும், பதவிகளுக்காகவும் முட்டிமோதிக்கொண்டதன் விளைவையே கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பார்க்கமுடிந்தது. தமிழ் அரசியற்கட்சிகள் மக்கள் நலன்சார்ந்து -அவர்களின் விருப்பங்களைப் பிரதிபலித்து நடந்துகொள்ளாமையாலேயே தெற்குக் கட்சி ஒன்றுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்திருந்தது. தமிழ்க்கட்சிகளின் போக்கில் மாற்றங்கள் தென்படாவிட்டால் இனிவரும் தேர்தல்களிலும் தமிழ்க்கட்சிகள் பெருத்த அடியைச் சந்திக்க நேரிடும்.

உள்ளூராட்சிசபைகளின் நிர்வாகம் தமிழ் மக்களால் தமிழ்க் கட்சிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. சபைகளில் எந்தக் கட்சி ஆட்சியமைத்திருந்தாலும், மக்களுக்கான சேவைகளில் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டியது அவசியம். அரசியல் காழ்ப்புணர்ச்சியையும், குத்துவெட்டுகளையும் காண்பித்து உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தாது, மக்களுக்கான சேவைகளை வினைத்திறனாக முன்னெடுக்கவேண்டியது அனைத்து உறுப்பினர்களின் பொறுப்பாகும். சபைகளின் ஆட்சியைப் பிடிப்பதற்குக் காட்டிய மும்முரத்தை இனிவரும் காலங்களில் மக்களுக்கான சேவைகளிலும் காட்டவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. அதை உணர்ந்து அனைத்துச்சபை உறுப்பினர்களும் செயலாற்றவேண்டும்.



# 4 பில்லியன் டொலருக்காக சீனா பறக்கின்றார் அநுர ?

கொழும்பு, ஜூன் 25

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீண்டும் சீனாவுக்குச் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சீனா சென்று நாடு திரும்பியுள்ளார். அமைச்சர் வசந்த சமரசிங்க தற்போது சீனாவில் தங்கியுள்ளார். சீனா சென்ற ரில்வின் சில்வா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீண்டும் சீனா செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் திரும்பியுள்ளார் என்று அரசாங்கத்தகவல்கள் கூறுகின்றன. அண்மையில் சீனா சென்று திரும்பிய ஜனாதிபதி மீண்டும் சீனா செல்லவுள்ளமை பேசுபொருளாகியிருக்கின்றது.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, பொருளாதார நெருக்கடி சமயத்தில் 4 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்க சீனா உறுதியளித்திருந்தது. ஆயினும் கோத்தாபய அதைத் தவிர்த்து சர்வதேச நாணயநிதியத்திடம் செல்வதற்கு முடிவெடுத்தார். அதனால் அந்த நிதி வழங்கப்படவில்லை.

அவ்வாறு நிறுத்தப்பட்டிருந்த 4 பில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே அநுர சீனா செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-75)

# ஜூன் 30–ஜூலை 5; டெங்கு ஒழிப்பு வாரம்

நாட்டில் டெங்கு அதிகரிப்பதன் காரணமாக ஜூன் 30 முதல் ஜூலை 5 வரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 27ஆயிரத்து 207 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 15 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளன. அடையாளம் காணப்பட்ட மாகாணங்களில் மேல் மாகாணத்தில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# மே மாதத்தில் பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 25

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்படி, நாட்டின் முதன்மைப் பணவீக்கம் மே மாதத்தில் 0.6 வீதமாக அதிகரித்துள்ளது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது ஏப்ரல் மாதத்தில் - 0.8% ஆகப் பணவீக்கம் பதிவாகியிருந்தது. இதேவேளை, உணவுப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 2.9% ஆகப் பதிவானநிலையில் மே மாதத்தில் 5.9 வீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன் உணவு அல்லாப் பணவீக்கம் ஏப்ரலில் 3.7% ஆகப் பதிவான நிலையில் மே மாதத்தில் 3.4% ஆக சற்று அதிகரித்துள்ளது. (ச-இ)

# இந்தாண்டில் இதுவரை 52 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு, ஜூன் 25

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இதுவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 52 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதிகளவிலான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# திருப்பியனுப்பப்பட்ட 5 எயார்லைன்ஸ்

கொழும்பு, ஜூன் 25

ஈரான் கட்டாரிலுள்ள அமெரிக்க இராணுவத்தளம்மீது மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலையடுத்து, மத்திய கிழக்கு நாடுகளுக்கான 5 ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்கள் வேறு விமானநிலையங்களுக்கு திருப்பிவிடப்பட்டுள்ளன. அதன்படி, மஸ்கட் விமானநிலையம் மற்றும் டுபாய் விமானநிலையத்துக்குத் தலா இரண்டு விமானங்கள் திருப்பிவிடப்பட்டுள்ளன, அதேநேரத்தில் ஒரு விமானம் ரியாத் விமானநிலையத்துக்குத் திருப்பிவிடப்பட்டுள்ளது. இதற்கிடையில், பிட்ஸ் எயார் விமானம் டுபாய்க்குத் திருப்பிவிடப்பட்டுள்ளது. இந்த விமானங்கள் குவைத், அபுதாபி மற்றும் தோஹாவுக்குப் பறந்துகொண்டிருந்ததாக சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி சீரமைப்புப் பணியில் 1.17 பில்லியன் விரயம்!

## கோப் குழுவில் தகவல்

கொழும்பு, ஜூன் 25
வடமத்திய மாகாணசபை வீதி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியைவிட 1.17 பில்லியன் மேலதிகமாக செலவிட்டுள்ளதாக கோப்குழு கண்டுபிடித்துள்ளது.

2023ஆம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி 53 வீதிகளைத் திருத்துவதற்கென 50 இலட்சத்திற்குக் குறைவான 741 திட்டங்களுக்கு பகிரங்க கேள்விப்பத்திரம் கோராமல் 2.93 பில்லியனைச் செலவிட்டுள்ளது. இவற்றில் 629 ஒப்பந்தங்கள் ஒரு ஒப்பந்தக் காரருக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளன. ஒரு கிலோமீற்றருக்கு 11 மில்லியன் செலவிடவேண்டிய ஒப்பந்தங்களுக்கு 45 மில்லியன் செலவிட்டுள்ளமையால் இலங்கையின் வீதி அபிவிருத்தி வரலாற்றில் இடம்பெற்ற மோசமான ஊழலாக இது கருதப்படுகின்றது. 500க்கும் குறைவான மாணவர்கள் கல்விபயிலும் பாட சாலை ஒன்றுக்கு 542 மில்லியன் செலவில் அரங்கு கட்டத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் அரங்கு கட்டும் வேலை நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கான நிதியை முதலமைச்சரே ஒதுக்கீடுசெய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ச-41-6)

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பலசரக்கு கடைக்கு பொருட்கள் பொதி செய்ய மற்றும் இதர வேலைகளுக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாட்கள் மட்டும் தேவை.
சம்பளம் 1800+300 (மதிய உணவு)
தொடர்புகளுக்கு
077 628 0685, 076 915 8072

## அறிவித்தல்



**துரைராஜசிங்கம் நிஷதன்**
**இலக்கம் 31/14 உடுவில் தெற்கு, மானிப்பாய் யாழ்ப்பாணம்.**
**அடையாள அட்டை இலக்கம் 861891810V**
**தொலைபேசி இலக்கம் 076 550 6238**

என்பவர் (23.06.2025) திங்கட்கிழமை முதல் எமது நிறுவனத்தில் இருந்து விலகிவிட்டார். எனவே இவ் நபருடன் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு எமது நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது என்பதை அறியத்தருகின்றோம்.

சோ. பிரகதீஸ்வரன்
உரிமையாளர்
சிற்றி ஹாட் வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல 55/57 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

**வேலையாட்கள் தேவை**

கொக்குவிலில் இயங்கும் AC திருத்தும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
பழக விரும்பும் வேலையாட்கள் தேவை.
தொடர்பு: 077 777 5716

## சாரதி வெட்டிக் கொலை; இளைஞர் ஒருவர் கைது

இரத்தினபுரியில் கிரிஎல்ல மெத கலதுரப் பிரதேசத்தில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவரை வெட்டிக் கொலைசெய்து, 25 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் கிரிஎல்லப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைச்சம்பவம் கடந்த 18 ஆம் திகதி நடந்துள்ளது. இரத்தினபுரி நகரத்தைச் சேர்ந்த 63 வயதுடைய முச்சக்கரவண்டி சாரதி ஒருவரே கொலைசெய்யப்பட்டிருந்தார். கைதுசெய்யப்பட்டவர் இரத்தினபுரியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞராவார். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் வனப்பகுதி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கத்தி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 04 . 1938



மறைவு
22 . 06 . 2025

**செல்லத்தம்பு அருளம்மா (தவமலர்)**

கொய்யாத்தோட்டம் பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பு அருளம்மா (தவமலர்) அவர்கள் கடந்த (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா-மரியம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லதம்பு-இரத்தினம் தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பிரான்சிஸ் செல்லத்தம்பு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான P.N.R அமிர்தவாசகம், P.N சாள்ஸ் மற்றும் அற்புதநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திரவியம், ரஞ்சிதம் மற்றும் லலிதா, காலஞ்சென்றவர்களான மனோன்மணி, வேதானந்தம், ஞானாந்தன், யோகானந்தன் லியூக் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரவி, காலஞ்சென்றவர்களான யஸ்ரின்.கஸ்ரன், இந்திரன் மற்றும் மைதிலி, மீரா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (26.06.2025) வியாழக்கிழமை காலை 09.00 மணியளவில் கொய்யாத்தோட்ட புனித கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வேலணை பிரதேச சபை, வேலணை

வேலணை பிரதேச சபையின் வேலணை உபஅலுவலகத்தின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பெருங்குளம், வேலணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலின் பரிபாலன சபையின் சார்பாக தலைவர் 05 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திரு.சுப்பையா சுந்தரலிங்கம் மற்றும் செயலாளர் 06 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திரு.செல்லத்துரை விக்னேஸ்வரநாதன் ஆகியோரின் விண்ணப்பம் தொடர்பானது. வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலின் பரிபாலன சபை, பெருங்குளம், வேலணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனத்தின் உறுதியின் பிரகாரம் வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தீவுப்பகுதி வேலணை கோவிற்பற்று, வேலணை பிரதேச செயலகம், வேலணை பிரதேச சபை, கிராம அலுவலர் பிரிவு J/16 வேலணை கிழக்கு இறை "புளியடியிற்புலம்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு ஐம்பத்தொன்று (51) குளி பதின்மூன்று தசம் ஐந்து ஆறும் (13.56) கொண்ட இதனுளடங்கிய முத்துமாரியம்மன் கோவிலும் அன்னதான மண்டபமும் கிழக்கெல்லை அரைவாசிக் கிணறும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் ஆகிய விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம், பிரசித்த நொத்தாரிசு திரு.சிவலிங்கம் இளங்கீரன் அவர்களினால் எழுதப்பட்ட 17865 ஆம் இலக்க 2025.05.15 ஆம் திகதிய பிரகடனம் உறுதி மூலம் வேலணை - பெருங்குளம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலின் பரிபாலன சபையின் சார்பாக தலைவர் 05 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திரு.சுப்பையா சுந்தரலிங்கம் மற்றும் செயலாளர் 06 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திரு.செல்லத்துரை விக்னேஸ்வரநாதன் ஆகியோர் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

**ஆதன விபரம்**

நிலஅளவையாளர் திரு.ஆ.செல்வராஜா அவர்களினால் வரையப்பட்ட 3828 ஆம் இலக்க 2025.04.12 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு ஐம்பத்தொன்று (51) குளி பதின்மூன்று தசம் ஐந்து ஆறு (13.56) விஸ்தீரணமுள்ள இவ்ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு..

கிழக்கு :- தேவிக்கோட்டம் சனசமூக நிலைய ஆதனமும், சிவன் கோவில் நாவலர் மடமும், பாதை முகப்பும்.
வடக்கு :- பாதை (பிரதான வீதிக்கு செல்வதற்கு)
மேற்கு :- பெருங்குளத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலமும், திருநாவுக்கரசு இராஜேஸ்வரியின் ஆதனமும்.
தெற்கு :- றோட்டு இதடங்கலும்

மேற்குறித்த ஆதனத்தை வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலின் பரிபாலன சபையின் சார்பாக தலைவர் 05 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திரு.சுப்பையா சுந்தரலிங்கம் மற்றும் செயலாளர் 06 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திரு.செல்லத்துரை விக்னேஸ்வரநாதன் ஆகியோர் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் உறவினர்கள் மூலமாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் மேற்குறித்த காலப்பகுதியினுள் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரிகளின் கோரிக்கையின் பிரகாரம் ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ளப்படுமென்பதையும் மேற்குறித்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதனால் எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளுக்கு வேலணை பிரதேச சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காதென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்
வேலணை பிரதேச சபை,
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனிதப் புதைகுழிகளுக்கு நீதியை நிலைநாட்டுங்கள்

### ஈ.பி.டி.பி. தெரிவிப்பு

வடக்கு -கிழக்கில் காணப்படும் அனைத்து மனிதப் புதைகுழிகள் தொடர்பாகவும் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சூத்திரதாரிகள் யார் என்பது வெளிப்படுத்தப்படவேண்டும் என்று ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், 90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மண்டைதீவில் இடம் பெற்றதாகக் கூறப்படும் படுகொலைகள் மற்றும் காணாமற்போனமை போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக எமது தலைமையை விசாரிக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இப்பொழுது மண்டைதீவு விவகாரத்தில் அக்கறை கொள்ளுகின்ற அவர், நல்லாட்சிக் காலத்தில் என்ன செய்துகொண்டிருந்தார்? அப்போது பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் அளித்திருக்க வேண்டும். ஆனால் நல்லாட்சிக் காலத்தில் குறித்த விவகாரத்தில் எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை. ஆக, தற்போது மண்டைதீவு பற்றி கதைப்பது அரசியல் நோக்கம் கொண்டதென்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

செம்மணி மனிதப் புதைகுழி உட்பட அனைத்து புதைகுழிகளிலும் வெளிப்படையாக அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அவை தொடர்பாக சுயாதீன மான நீதி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அவை எந்தக் காலப்பகுதியில் புதைக்கப்பட்டன, அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் யார்? போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்றார். (ச-20)

### வலி.மேற்கில்

# கழிவகற்றல் பிரச்சினைகள் முறையிட என் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வலிகாமம் மேற்கில் திண்மக்கழிவு அகற்றல் சம்பந்தமான முறைப் பாடுகளுக்குத் தொலைபேசி இலக்கமொன்றை பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜெயந்தன் அறிமுகம் செய்துள்ளார்.

பிரதேசத்தில் திண்மக் கழிவகற்றல் சம்பந்தமான பிரச்சினைகளைத் தவிர்க்கும் முகமாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி 0766449919 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன்மூலம் முறைப்பாடு களைப் பதிவுசெய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டது. (ச-125)

### யாழ்.மாவட்டச் செயலகத்தின்

# ஒரேயொரு கூட்டத்துக்கு ரூ.87,926 ரூபா செலவு

**யாழ்ப்பாணம், ஜூன் 25**

**யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த மே மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்காக 87 ஆயிரத்து 926 ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.**

தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் கோரப்பட்ட தகவலுக்கு அமைவாக இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

சிற்றுண்டி மற்றும் தேநீருக்காக மாத்திரம் 57 ஆயிரத்து 926 ரூபாவும் ஒலி அமைப்புக்காக 30 ஆயிரம் ரூபாவும் செலவழிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை பன்முகப்படுத்தப் பட்ட நிதித் திட்டத்தின்கீழ் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் மாவட்டச் செயலகம் , ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் வாடகைக்கு ஒலி அமைப்பைப் பெறுவதுடன் குறித்த செலவினங்களைத் தடுக்கும் முகமாக நிரந்தர ஒலி அமைப்பை மேற்கொள்ளமுடியாதுள்ளமை இதனூடாகப் புலப்படுகின்றது. (ச-25,125)



# வவுனியா ஏ-9 வீதியில் முழுமைபெறாத பாலம்

### பொதுமக்கள் அசௌகரியம்

வவுனியா, ஜூன் 25

ஏ-9வீதியில் வவுனியா மாநகரசபை மைதானத்துக்கு முன்பாகவுள்ள பழையபாலம் அகற்றப்பட்டு புதிய பாலம் அமைக்கும் பணி கடந்த ஏப்ரல் மாதம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இரு மாதங்கள் கடந்துள்ளபோதும் இதுவரை பாலம் முழுமைபெறவில்லை. இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகவேண்டியுள்ளது என்று பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வீதி பிரதான வீதியாக உள்ளமையால் அதிகமான வாகனங்கள் அந்த வீதியைப் பயன்படுத்திவருகின்றன.

இந்தநிலையில் பாலம் அமைக்கும் பணி தாமதமாகின்றமையால் அந்தப் பகுதியில் தினமும் நெருக்கடி நிலை ஏற்பட்டுவருகின்றது.

எனவே வீதி அபிவிருத்தி அதிகாரசபை விரைந்து நடவடிக்கை எடுத்து பாலப் பணிகளைப் பூர்த்திசெய்யவேண்டுமென்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-110)

# மாகாணத் தேர்தலுக்கான அரசியல் சமர் விரைவில்!

### எதிர்க்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு கோரும் அரசியல் சமரை ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் ஆரம்பிக்கும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் எதிர்பார்த்த பெறுபேறு கிடைத்திருந்தால், மாகாணசபைத் தேர்தலையும் அரசாங்கம் உடன் நடத்தியிருக்கும். ஆனால் தற்போது மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமா என்பது சந்தேகமே. வெற்றியோ, தோல்வியோ தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும். அதுதான் ஜனநாயகம். அந்த ஜனநாயக உரிமையை வெல்வதற்குரிய சில வேலைத்திட்டங்களை நாம் விரைவில் முன்னெடுப்போம் - என்றார். (ச-44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் நடுக்குடாவில் பீடி இலைகள் மீட்பு!

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி, நடுக்குடாக் கடற்கரைப் பகுதியில் வைத்து ஒரு தொகுதி பீடி இலை மூடைகள் மற்றும் ஒரு தொகுதி பீடிக் கட்டுகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் இந்தியாவிலிருந்து படகுமூலம் கடத்திவரப்பட்ட நிலையில் 45 மூடைகளில் பொதி செய்யப்பட்ட ஆயிரத்து 360 கிலோ பீடி இலைகள் மற்றும் 29 ஆயிரத்து 120 பீடிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. கடற்படைக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில் குறித்த பொருள்கள் மீட்கப்பட்டநிலையில் கடற்படையினர் மன்னார் மதுவரிநிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் மன்னார் மதுவரிநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ச-56)

## மரண அறிவித்தல்



### திருமதி.தில்லைநாயகி சிவஞானம்

**(ஓய்வு பெற்ற சிரேஷ்ட மேற்பார்வையாளர்)**

திருநெல்வேலி வடக்கு ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகவும். நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. தில்லைநாயகி சிவஞானம் அவர்கள் **24.06.2025** செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஊரெளு காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் மனைவியும். காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகளும். கலா. யோகேந்திரா. ஆனந்தி. சக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும். சந்திரகுமாரன். சீதாலக்ஷ்மி. பரந்தாமன் ஆகியோரின் மாமியாரும். பிரசன்னா. கீர்த்தனி. பிரணவன். வித்தியா. சியாமளி. சுரேன். ஷரோனா. ராஜேஷ். பிரதீஷா ஆகியோரின் பேத்தியும். சித்தார்த். ரித்வின். செயோன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்க்கொழும்பு **25A,** மடுமாவத்தை இல்லத்தில் **25.06.2025** புதன்கிழமை காலை **10.00** மணிக்கு இடம் பெற்று நீர்கொழும்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல் : ஆனந்தி (மகள்)**

**தொலைபேசி :**
**0774541532**

## அந்தியேட்டி வீட்டுகிருத்திய அழைப்பிதல்



### அமரர் மார்க்கண்டு நாகராசா


அன்புடையீர்
கடந்த (26.05.2025) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவன்
அமரர் மார்க்கண்டு நாகராசா
அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த (23.06.2025) திங்கட்கிழமை அன்று காலை 08.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடை பெற்றது.
வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.06.2025) புதன்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இழப்பில் துயரில் பங்குகொண்டவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின் போது உதவியவர்கள், தொலைபேசி, மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சங்குவேலி வடக்கு,**
**மானிப்பாய்.**
**(குட்டிப்போக்கன் லேன்)**

**குடும்பத்தினர்**
**076 281 3821**

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் முருகேசு பாலசுப்பிரமணியம்

ஏழாலை கிழக்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு விழிசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (24.06.2025)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-இராசம்மா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவகாமிஅம்மையாரின் பாசமிகு கணவரும் சிவபாலன் (முன்னாள் ஆசிரியர்-இரத்மலானை இந்துக் கல்லூரி, கொழும்பு), துவாரகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- யாழ் போதனா வைத்தியசாலை), வாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வலி மேற்கு பிரதேச சபை-சுழிபுரம்), டபரூபன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-வலி தெற்கு பிரதேச சபை-சுன்னாகம்), ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்பரசி (பிரதான பொறியியலாளர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை-கொழும்பு), சிவச்செல்வன் (ஆசிரியர் விக்டோறியா கல்லூரி - சுழிபுரம்), சத்தியவதனா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்- நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, கந்தையா, தெய்வானை, வள்ளியம்மை, இலட்சுமி அகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரலிங்கம், சந்திரலிங்கம் மற்றும் ஞானாம்பிகை ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யர்சிகன், சிவாதிகா, கேசிகன், காருண்யா, தாரகா, கீர்த்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விழிசிட்டி,**
**ஏழாலை தெற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு
28
.
10
.
1950



இறப்பு
22
.
06
.
2025

### சின்னத்தம்பி ரகுலேந்திரன் (ஸ்ரலின்)

**(ஓய்வு பெற்ற சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் - உள்ளூராட்சி திணைக்களம் வட மாகாணம்)**

இல.09 பலாலி வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் திருகோணமலை மற்றும் நீராவியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னத்தம்பி ரகுலேந்திரன் (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மகேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், ரகுலேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான ஐயங்கர் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னார் ரஞ்சினி ரவீந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (கனடா), ராஜசேகரன் (கனடா), குமுதினி, சாந்தினி (கனடா), மாலினி, பாமினி (அமரிக்கா), சுபாசினி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அச்சுதம்பிள்ளை, பிறேமரஞ்சினி, ராகினி, சுபாசினி, சிவராஜா, வசந்ததாசன், தம்புசாமி, விமலதாசன், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, குமாரசாமி, மகேஸ்வரி மற்றும் ராஜரத்தினம், கமலாவதி, குலவீரசிங்கம், சிவனேசன், ரகுலராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கார்த்திகா, நிரோஸ் காலஞ்சென்ற நிசாந், பிரசாந், அபிராமி, சிந்துரா, காசினி, சஜன், சரன் ஆகியோரின் மாமனாரும், நிரோஜன், காயத்திரி, டினேஸ், உமேஸ், அஜித், அனுஜன், யனனி, தருணி ஆகியோரின் பெரியதகப்பனாரும், லோசித், மேகித், விஹான், அட்சரா, திவியோ, சுசானா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் நாளை (26.06.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகன கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறிய தருகின்றோம்.

**தகவல் - ரகுலேஸ்வரி (வவி)**
**மனைவி**
**076 698 4724**

**34/3A புகையிரத நிலையவீதி,**
**1 ம் ஒழுங்கை, பிரவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயலுக்குக் கிடைக்கும் வெகுமதியானது மற்றொரு செயலை நிறைவேற்றத் தேவையான சக்தியாகின்றது.

- ஜோர்ஜ் எலியட்

# புதன் பொய்கை

25.06.2025
புதன்கிழமை

# மத்திய கிழக்கில் கருக்கொள்ளும் மூன்றாம் உலகப்போர்!

■ ய.தர்ஷா




'சர்வதேச அரசியல் என்பது அதிகாரத்துக்கான போராட்டமே அன்றி வேறொன்றுமில்லை' என்ற ஹான்ஸ் கர்ந்தோவின் கருத்துக்கு இணங்க, இன்றைய உலக அரசியலின் போக்கும் அதிகாரத்தை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் அதிகளவான மக்கள் தொகையுடன் புவியியல் மற்றும் பொருளாதார ரீதியில் தனித்துவம் வாய்ந்த நாடாகக் காணப்படும் ஈரான்மீது, இஸ்ரேல் போர் தொடுப்பதற்கு பல்வேறுபட்ட அரசியல் பின்புலங்கள் காரணமாக அமைந்துள்ளன.

### விரோதிகளான நண்பர்கள்

ஈரான் மற்றும் இஸ்ரேலுக்கிடையிலான உறவு என்பது நீண்டகாலப் பகை என்று கூறுவதற்கில்லை. ஏனெனில், இஸ்லாமியப் புரட்சிக்கு முன்பாக இந்த இரு நாடுகளும் நட்புறவாகவே இருந்தன. 1979 இஸ்லாமியப் புரட்சியின் பின்பு ஈரானில் புதிய ஆட்சி தோற்றம்பெற்றது. இதன் பின்னரே இஸ்ரேலும் ஈரானும் எதிரி நாடுகளாக மாறின. ஈரான் பலஸ்தீனியர்களின் ஆதரவான நாடாகக் காணப்படுவதுடன் மத்திய கிழக்கு நாடுகளிலே பெரும் பலம்வாய்ந்த நாடாகவும் அமெரிக்கா உட்பட வல்லரசு நாடுகளுக்கு சவாலான தேசமாகவும் விளங்கி வருகின்றது. இத்தகைய பின்னணியில் இஸ்ரேல்- ஈரான் மீது தாக்குதலைத் தொடர்வதற்கான காரணங்கள் தொடர்பாக பின்வருமாறு நோக்குவோம்.

ஈரான் - இஸ்ரேலுக்கு நீண்டகாலமாக அச்சுறுத்தலான நாடாகக் காணப்படுகின்றமை நேரடியான போரினை முன்னெடுப்பதற்கு முதன்மையான காரணமாக அமைந்துள்ளது. ஈரான் ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளைவிட அதிக மக்கள் தொகையைக் கொண்டது. அது இராணுவத்தில் பெரும் முதலீடு செய்துள்ளது. பெரிய பாலிஸ்டிக் ஏவுகணை ஆயுதக் களஞ்சியத்தையும், மத்திய கிழக்கைச் சுற்றியுள்ள பினாமிப் போராளிகளின் விரிவான வலையமைப்பையும் கொண்டுள்ளது. இவை அனைத்தும் இஸ்ரேலுக்குப் பெரும் பாதிப்பை காலாகாலமாக ஏற்படுத்திவருகின்றன. அதுமட்டுமன்றி மத்திய கிழக்கு நாடுகளின் ஆதரவும் ஈரானுக்கு அவ்வப்போது இருந்துவருகின்றது. இத்தகைய பலம்வாய்ந்த பின்புலமே இஸ்ரேல் ஈரான்மீது போர் தொடுப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

### ஆட்டுவித்த அணுசக்தித்திட்டம்

ஈரானின் அணுசக்தித்திட்டமும் இந்த மோதல்களுக்கு மற்றொரு முக்கியமான காரணமாக அமைந்துள்ளது என்றால் அதை மறுப்பதற்கில்லை. இஸ்ரேல் ஈரானின் அணுசக்தித் திட்டத்தைத் தன் இருப்புக்கான அச்சுறுத்தலாகவே கருதிவருகிறது. ஈரானின் அணுமின் நிலையங்கள்மீது இஸ்ரேல் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. 2010ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில், அது அணு ஆயுதங்களை உருவாக்குவதைத் தடுக்க பல இணையவசதிகளையும் அணு விஞ்ஞானிகளையும் குறிவைத்தது. 2010ஆம் ஆண்டில், அமெரிக்காவும் இஸ்ரேலும் கணினி வைரஸை உருவாக்கி ஈரானுக்குள் பரப்பி, ஈரானின் திரவுக்கட்டமைப்பை அழித்தன. இது தொழிற்றுறை இயந்திரங்கள் மீது பகிரங்கமாக அறியப்பட்ட முதல் சைபர் தாக்குதலாக அமைந்திருந்தது. இப்போது நேரடி மோதல் வெடித்துள்ளது. இந்தத் தாக்குதல் 'ஒப்ரேஷன் ரைசிங் லயன்' என்ற திட்டத்தின் ஓர் அங்கமாக நடத்தப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறியுள்ளார். ஈரானின் அணுத்திட்டத்தினை அழிப்பதன்மூலம் ஈரானின் பலத்தை முறியடிக்க முடியும் என இஸ்ரேல் கருதுகின்றது.


### ஆட்சிமாற்றமே நோக்கம்

ஈரானில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதும் இஸ்ரேலின் பிரதான நோக்கமாகும். இதனால்தான், ஈரானின் ஆயுதக் கட்டமைப்பின் மூளையாகச் செயற்படும் அனைவரும் இஸ்ரேலால் கொல்லப்படுகின்றனர். இவ்வாறு இராணுவத் தலைமைகளையும் அரசியல் தலைமைகளையும் நீக்குவதன்மூலம் தமக்கு நட்புறவான தலைவர்களை ஆட்சிக்கு அமர்த்துவதனை இஸ்ரேல் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக 1979ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சியின்மூலம் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் ஷாவின் மகனும், ஈரானின் முன்னாள் பட்டத்து இளவரசருமான ரேசா பஹ்லவியை மீண்டும் ஈரானின் ஆட்சியாளராக உருவாக்குவதற்கு இஸ்ரேல் முயற்சித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. எனினும், மத்திய கிழக்கு ஆய்வாளர்களிடையே இஸ்ரேல் ஈரானைத் தாக்குவதற்கு மிக அதிக விலை கொடுக்கவேண்டியிருக்கும் என்பது பொதுவான கருத்தாக உள்ளது. இஸ்ரேல்மீது ஈரானின் ஏவுகணைத் தாக்குதல், அது குறைந்தபட்சம் சில பதிலடி கொடுக்கும் திறனைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. மேலும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட பேரழிவுகரமான எதிர்வினை வரவிருக்கும் நாள்களில் நடக்கும். அத்தகைய தாக்குதல் இஸ்ரேலிய இராணுவ இலக்குகளை மட்டுமின்றி நாட்டின் நகரங்களையும் தாக்கும். அத்துடன், பிராந்தியத்தில் இருக்கும் அமெரிக்கப் பணியாளர்களைக் கொல்லவும் வாய்ப்புள்ளது. இஸ்ரேல் ஈரானின் அணுவாயுத வளர்ச்சியினை தடுப்பதை நோக்கமாகக்கொண்டு இந்த யுத்தத்தினை முன்னெடுக்கின்றபோதிலும் அணுகுண்டு தயாரிப்பதை நிரந்தரமாகத் தடுப்பது சாத்தியமற்றது. இலக்குவைக்கப்பட்ட அரசாங்கம் ஓர் ஆயுதத்தைப்பெற உண்மையிலேயே உறுதியுடன் இருந்தால், அழிக்கப்பட்ட எதுவும் மீண்டும் கட்டியெழுப்பப்படலாம். இஸ்ரேலியத் தாக்குதல் அணுசக்தியைப் பெறுவதில் ஈரானின் ஆர்வத்தை வலுப்படுத்தும். அதாவது குண்டுகள் விழுவது நின்றவுடன் ஈரான் அணுசக்தி மறுசீரமைப்புக்காக பெரும் வளங்களில் முதலீடு செய்வதற்கே வாய்ப்புள்ளது. 1981 ஆம் ஆண்டில் ஈராக்கின் ஒசிராக் அணுசக்திக் கட்டமைப்பின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குப் பிறகுதான் இது நடந்தது. இது சதாம் உசேனின் அணுசக்தி வளர்ச்சியை இரட்டிப்பாக்கும் முடிவுக்குக் காரணமானது இந்த நிலைப்பாட்டினையே ஈரானும் கைக்கொள்ள முயற்சிக்கும். இந்தப்போர் மத்திய கிழக்கு நாடுகளை மட்டுமல்லாமல் இலங்கை போன்ற நாடுகளையும் பெரிதும் பாதிக்கும். கச்சா எண்ணையின் விலை அதிகரிப்பு ஏனைய தேசங்களில் எண்ணெய் விலைகள் அதிகரிப்பதற்கும் தட்டுப்பாடுகள் ஏற்படுவதற்கும் காரணமாக அமையும். இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் விரைவில் சரிசெய்யப்படவேண்டும். இல்லையேல் சரிசெய்யப்படமுடியாத விளைவுகளை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சைகைமொழி பேசுவோரின் வாழ்வியல் தொடர்பிலும், அவர்களின் மொழியியலை ஏற்றுக்கொள்வது தொடர்பிலும் கடந்த வாரம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சியே இது...



# புறக்கணிப்பற்ற சமூகம் உருவாக சைகைமொழியை அங்கீகரித்தல்!

கட்டுரையாளர்கள்:
■ பேராசிரியர் திருமதி ச.சிவாணி,
கலாநிதி திருமதி ச.டிலோஜினி,
ம.சத்தியகுமார்,
திருமதி த.தசிகா,
கு.ஜெகாசினி,
ரா.சிறீரங்கநாயகி,
வி.திவாகர்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இலங்கையில் நிலவிவந்த கடந்தகால யுத்தம், தமிழர், சிங்களவர், முஸ்லிம்களுக்கு இடையிலான இனரீதியான விரிசல்களை உருவாக்கியிருந்தாலும், சைகைமொழிச் சமூகமாக தங்களுக்குள்ள பிரச்சினைகளையும் தேவைகளையும் முறைப்பாடுகளையும் வெளிப்படுத்தி இம்மூன்று இனத்தவர்களும் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒருமித்துப் போராடுகின்றார்கள். ஆனால், இலங்கையில் இருந்து வேறு நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்ற சைகை மொழி பேசுபவர்கள் மிகவும் மகிழ்ச்சிகரமாக வாழ்வதை அவதானிக்கமுடிகின்றது.



வெளிநாட்டில் புலம்பெயர்ந்தவர்களுக்கு அந்தந்த நாட்டில் 24 மணிநேர வெளிப்பட்டாளர் சேவை வழங்கப்படுகின்றது. சைகைமொழி பேசுபவர்கள் எந்த நேரத்திலும் தமக்கான உதவி தேவைப்படும்போது உடனடியாக காணொலி அழைப்பை ஏற்படுத்தி வெளிப்பாட்டாளர்களோடு தொடர்புகொள்ளமுடியும். இவர்கள் சைகைமொழிமூலம் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தும்போது வெளிப்பாட்டாளர்கள் உடனடியாக அவர்களுக்குத் தேவையான சேவை கிடைப்பதற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்துகொடுக்கின்றனர். இதனால் இவர்கள் மத்தியில் வேறு நாடுகளுக்குச் சென்று வாழ்வது தமது நலனுக்குச் சிறப்பானது என்ற ஆழமான கருத்து வேரூன்றியிருக்கின்றது. இத்தகைய சிக்கல் வாய்ந்த சமூக அமைப்பால் அல்லற்படும் மக்கள் தமது சொந்தநாட்டில் சகல தேவைகளும் நிறைவேற்றப்பட்டு மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு எமது நாட்டு உட்கட்டுமான வசதிகளும் சேவை வழங்கல் முறைகளும் சைகைமொழி பேசும் மக்களை மையப்படுத்தியதாக மாற்றம்பெறவேண்டும்.

## நீளும் பேரச்சம்

சைகை மொழிபேசும் மக்கள் தமக்குப் பிறக்கப்போகும் குழந்தைகளில் செவிப்புல மற்றும் பேச்சுத்திறன் பற்றி அறிந்துகொள்வதற்கு முயற்சிக்கின்றார்கள். சைகைமொழி பேசும் கர்ப்பிணிகள் தமது வயிற்றில் இருக்கும் குழந்தைகளும் தம்மைப்போல பிறந்துவிடுவார்களோ என்னும் அச்சம் அவர்களது கர்ப்ப காலத்தை ஆட்கொள்கிறமையும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

அரச நிகழ்ச்சித்திட்டங்கள் சைகைமொழி பேசுவோருக்கான அடிப்படை வீட்டு வசதிகளை வழங்கியிருக்கின்றன. இந்த அடிப்படை வசதிக்கு மேலதிகமாக இவர்கள் எதிர்பார்ப்பது தமக்கான ஒரு நிரந்தரத் தொழிலாகும்.

சைகைமொழிச்சமூகம் வலுவூட்டப்பட்டதையும் வளம் பெறுவதையும் உறுதிப்படுத்தி அவர்களுக்கான சகல உதவிகளும் கிடைக்கப்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு சமூக ஆர்வலர்கள், கல்வியலாளர்கள், சமூக நலனுக்காக போராடுபவர்கள், அரசாங்க நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினரும் ஒன்றாகச் செயற்பட்டால் மட்டுமே இவர்களுடைய குறைகள் தீர்க்கப்படும். சமூக உள்வாங்கலின் ஆரம்பமானது பிரச்சினைகளைக் கண்டறிதலிலும் தன்னிலையிலிருந்து அந்தப் பிரச்சினைகளை நோக்குதலிலும் தொடங்குகின்றது.

தம்மோடு ஒப்பிடும்போது சைகைமொழி பேசும் மக்களின் அடிப்படைத்தேவை, வேண்டுகைகளைப் புரிந்துகொள்வதும் வெளிப்படுத்துவதும் சமத்துவத்துக்கும் ஒப்புரவுக்குமான அடிப்படையாக இருப்பதோடு இது சமூக உள்வாங்கலுக்கு நம் அனைவரையும் அழைத்துச் செல்கிறது. இது எமது சமூகத்தின் ஓர் இணைந்த பொறுப்பாகும்.

சைகைமொழி பேசுபவர்கள் இலகுவாகத் தொடர்பாடல் மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதோடு கல்வியைப் பெற்றுக்கொள்ளல், பொருத்தமான வேலைகளில் இணைந்துகொண்டு சமூகத்துடன் முழுமையாக இணைந்து வாழ்வதற்காக நாம் அனைவரும் எம்மால் முடிந்த பங்களிப்பினை மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம் சைகை மொழி பேசுவோரை சமூகத்துக்குள் உள்வாங்கிய மகிழ்வு எமக்குக் கிடைக்கும். இதன்மூலம் எமது சமூகம் ஆரோக்கியமான புறக்கணிக்கப்பட்ட மக்களைக் கொண்டிராத, சமத்துவம் மேம்பட்ட சமூகமாக மாறும்.

(முற்றும்)

# கிராமஅலுவலர் கனகசபை

## 24 மணிநேரச் சேவைக்கு உத்தரவாதம் கொடுத்தவர்!

நீத்தார் நயப்புரை



கீரிமலையில் முன்னைய நாள்களில் 'கனகசபை' என்ற கிராம அலுவலர் ஒருவர் இருந்தார். 'கனகசபை விதானையாரிடம் போகிறவர்கள் பேனையுடன் போக வேண்டும்' என்று கிராமத்தவர்கள் சொல்வார்கள்.

காரணம் அவர் எங்கு நிற்கின்றாரோ அங்கு வைத்து அவர் தனது கடமைகளை நிறைவேற்றி மக்களை அனுப்பிவைப்பார். தோட்டம், வாசிகசாலை என அனைத்து இடங்களும் அவரின் 'அலுவலகங்களாகவே' இருந்தன.

அத்துடன் அரசாங்கத்தின் உதவித் திட்டங்களை, செயற்றிட்டங்களை மக்களிடம் கொண்டுசென்று சேர்ப்பதில் அவர் முழுமையான அக்கறையுடன் செயற்பட்டார். தானாக முன்வந்து உதவிசெய்யும் மனப்பாங்கு கிராம அலுவலர் கனகசபையிடம் இருந்தது. கிராமசேவகராக கடமையற்றியது மட்டுமன்றி பல சமூகப்பணிகளிலும் கனகசபை ஈடுபட்டுள்ளார்.


தற்போது கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம் அமைந்துள்ள காணியை பாடசாலை கட்டுவதற்காக அன்பளிப்பாக வழங்கிய பெருந்தகை கனகசபை. அத்துடன் கிராமத்தவர்களின் சுகதுக்கங்களிலும் பங்குபற்றி குடும்ப நண்பராகச் செயற்பட்ட ஒருவர். கிராமத்தில் அனைவரின் வீட்டிலும் நல்லது, கெட்டது நடைபெற்றால் அங்கு பிரசன்னமாகியிருப்பார்.

அன்னாரின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தில் ஜூலை முதலாம் திகதி அன்னாரது 125ஆவது பிறந்த தினத்தன்று வடமாகாண ஆளுநர் வேதநாயகனால் சிலை திறந்துவைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி பாலசுப்ரமணியம் சுதாகரன்
துரை வீதி, இணுவில்

# தேகநலன் காக்கும் யோகம்



**ஜூன் மாதம் 21ஆம் திகதி சர்வதேச யோகா தினமாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

'உளனுடம்பு ஆலயம்' என மனிதகுலத்தின் உடலை வர்ணித்தார்கள் நம் முன்னோராகிய சித்தர்கள். ஏனெனில், இந்த உடல் வெறும் உடல் மட்டுமன்று இறைவன் வீற்றிருக்கும் புனிதமான ஆலயமும்கூட. ஆதலால், உடல் நோயற்றிருக்குமாறு பார்த்துக் கொள்வதும் அதனைப் பேணிக்காப்பதும் நம் தலையாய கடமையாகும். நோய் வந்தபிறகு மாத்திரை மருந்துகளை உட்கொண்டு குணப்படுத்துவதைவிட நோய் வராமல் பாதுகாப்பதே அறிவுடமையாகும். இதற்கு யோகாசனங்கள் பெரிதும் உதவுகின்றன. யோகாசனத்தின்மூலம் நோய்கள் வராமல் தடுத்துக்கொள்ளலாம். நம் முன்னோர் அப்படி வாழ்ந்தும் இருக்கிறார்கள்.

உடலில் உள்ள உறுப்புகளும் மனமும் ஆரோக்கியமாய் இருப்பது மிகமிக அவசியம். எனவே உடலுறுப்புகளைக் கட்டுக்கோப்புடன் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய பயிற்சியே ஆசனம். இதைப்போலவே மனத்தூய்மையைப் பேணுவதற்கு மேற்கொள்ள வேண்டிய பயிற்சியே யோகம். இந்த இரண்டையும் 'யோகாசனம்' என்ற பழங்காலப் பயிற்சி முறையில் மேற்கொண்டால் நீண்ட ஆயுளோடு வாழலாம். இன்றைய சூழ்நிலையில் காற்று, சுற்றுப்புறம், தண்ணீர் ஆகிய அனைத்தும் மாசடைந்தநிலையில் உள்ளன. இப்படிப்பட்ட நிலையில் உடலைப் பலப்படுத்தவேண்டியது அவசியம். அதுமட்டுமன்று சூழ்நிலைக்கேற்ப உடலை நன்கு பக்குவப்படுத்தவேண்டும். இந்த மாசடைந்தவற்றை ஏற்றுக்கொள்ளும்வகையில் உடலைப் பக்குவப்படுத்துவதே நம்முடைய புத்திசாலித்தனமாகும்.

சிறுவயதில் இருந்தே யோகாசனம் செய்வதனால் நம் விருப்பத்திற்கு ஏற்றவாறு எந்த வயதிலும் உடலை வளைக்கும் தன்மையைப் பெறலாம். மன அமைதி, தன்னம்பிக்கை, வாழ்வில் வெற்றி இவையனைத்துக்கும் யோகாசனங்கள் மிக உதவியாக இருக்கும். மூச்சுக்காற்று மண்டலம், இரத்த மண்டலம், ஜீரண மண்டலம், நரம்பு மண்டலம் இவை சீராக இயங்க யோகாசனம் உதவுகிறது. அத்துடன், ஒழுக்கப் பண்புகளை மனதளவில் வளர்த்துக்கொள்ளவும் உதவுகிறது. நமது நாளமில்லா சுரப்பிகளின் செயற்பாடுகளைச் சீரமைத்தும், நரம்புகளை ஊக்கப்படுத்தியும் இளமையை நீடிக்கவும் உதவுகிறது. உடலுக்கு அழகான வடிவத்தையும் கொடுக்கிறது. ஆன்மா தன் பரிபூரண நிலையை அறிந்துகொள்ளவும் உதவுகிறது. தொடர்ந்து யோகாசனங்கள் செய்துவந்தால் நம் உடலில் உள்ள பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும்.

இன்றைய நவநாகரிக உலகில் மனிதன் தன் அகவாழ்வைப் புறக்கணித்து, புறவாழ்வில் முற்றிலுமாக தன்னைப் பிணைத்துக்கொண்டுவிட்டான். சுருக்கமாகச் சொன்னால் மனிதன் தன் அகச்செயல்களுக்கும், புறச்செயல்களுக்கும் இடையே இருந்த நல்லுறவை இழந்துவிட்டான். அந்த நல்லுறவு மனிதனின் வெற்றிகரமான, மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்குத் தேவை என்பதை மறந்துவிட்டான். அத்துடன் மனிதனானவன் மிக அதிகமான மருந்துகளையும், நச்சுப் பொருள் கலந்த உணவுகளையும் பயன்படுத்தி இயற்கையின் விதிகளுக்கு முரணாக தன் உடலை பாழ்படுத்திக்கொண்டிருக்கிறான். இந்தத் தவறான வாழ்க்கை முறையைப் பலர் தற்போது உணரத் தலைப்பட்டுள்ளனர். இதனால், இன்றைய வாழ்வின் ஓர் இன்றியமையாத சொல்லாக யோகா மாறிவிட்டது.

**யோகாசனத்தால் அடையும் நன்மைகள்**

1. ஆயுளை அதிகரிக்கச்செய்கிறது.
2. இதயம், சுவாச உறுப்புகளை விரியமாக்குகிறது.
3. உடலுக்கு மிகுந்த பலத்தைக் கொடுக்கிறது.
4. உடலின் இரத்த ஓட்டத்தை ஒழுங்குசெய்கிறது.
5. உடலை அழகாக வளப்புறச் செய்கிறது.
6. ஊளைச்சதை உடலில் பற்றாது தடுக்கிறது.
7. எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கச்செய்கிறது.
8. என்றும் இளமையுடன் வாழ வழி செய்கிறது.
9. ஐம்புலன்களையும் கட்டுப்படுத்த உதவுகிறது.
10. ஞாபகசக்தியை அதிகரிக்கச்செய்கிறது.
11. சோர்வையும், சோம்பலையும் ஒழிக்கிறது.
12. மூளைக்குப் பலம் கொடுக்கிறது.
13. மனதுக்கு சாந்தியைக் கொடுக்கிறது.
14. நோயற்ற வாழ்விற்கு வழி கூறுகிறது
15. வேலைசெய்வதற்கு அதிக சக்தியை உடலுக்கு அளித்து, மூளைக்குக் கற்பனை வளம், சிந்தித்துத் தெளிவான முடிவு எடுக்கும் ஆற்றல்களையும் அறிவையும் அளிக்கிறது.

யோகாவின் மூலபுருஷர் திருமூலர் தன் திருமந்திர நூலில், 'உடம்பினை முன்னம் குழக்கென்றிருந்தேன் உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன் உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே!' என்று யோகம் தொடர்பில் தன் கருத்தைப் பதிவுசெய்துள்ளார். எம்முன்னோர்கள் 'யோகாசனம்' என்னும் அரிய சஞ்சீவியை எமக்கு ஆக்கித் தந்துள்ளனர். அதன் அருமைகளையும் பெருமைகளையும் உணர்ந்து அதன் மூலம் முழுமையான பயனை அடையவேண்டியது எம்முன்னால் உள்ள கடமையும் பொறுப்புமாகும்.



## அம்மா...



அன்பின் உருவம் நீ தான் என் அம்மா
அழகின் முதற்சொல் நீதான் என் அம்மா.
பசுமை பரப்பும் பூவிதழ் போல்,
பாசம் பொங்கும் புனிதமும் நீயே!

என் இருவிழி பார்த்த முதல் முகம் நீதான் என் அம்மா
சிறு தவறுகள் எல்லாம் மன்னித்து திருத்தி எடுக்கும்
சிறந்த ஆசானும் நீயே என் அம்மா

வயிற்றில் வளர்த்து உலகிற்கு ஈந்தாய்,
வாழ்வின் வழிகாட்டி, நீதானே!
உதிரத்தை பாலாக்கி
உயிரும் கொடுத்து என் சுவாசம் தனை காத்து
வளர்த்த தெய்வம் நீதான் என் அம்மா

பாதை தடுமாறும் பொழுதுகளில்,
பரிசென வந்தாயே நீ என் பக்கம்.
அம்மா... இம்மண்ணில் தேவதை யார் எனக் கேட்டால்
என் உள்ளம் உணர்ந்து வரும்
வார்த்தை நீ தான் என் அம்மா

தங்கராசா டனுசன்
(பாலிநகர் வவுனிக்குளம்)

புதன்பொய்கைக்கு நீங்களும் எழுதலாம்



- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டால் நற்பண்புகள் வளரும் - பிரதமர் ஹரிணி

கல்வி ஓர் இம்சையாக மாறிவிட்ட காலத்திலும், விளையாட்டின்மூலம் தலைமைத்துவம், அணி உணர்வு மற்றும் சகிப்புத்தன்மை போன்ற மிகவும் முக்கியமான பண்புகளை வளர்த்துக்கொள்ள முடிந்திருக்கிறது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாம் விளையாட்டைத் தேர்ந்தெடுப்பது ஒற்றுமை உட்பட விளையாட்டின் நற்பண்புகளை நமக்குள் வளர்த்துக்கொள்வதற்கே தவிர வெற்றியை மட்டும் இலக்காகக்கொண்டு அல்ல என்றும் பிரதமர் ஹரிணி அமர சூரிய தெரிவித் துள்ளார்.

சுகததாச விளை யாட்டு அரங்கில் நடைபெற்ற பாட சாலை நீச்சல் விளையாட்டுச் சங் கத்தால் ஏற் பாடுசெய்யப்பட்ட 50ஆவது பாட சாலை வருடாந்திர நீச்சல் விளையாட் டுப் போட்டியின் நிறைவு விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித் துள்ளார். (எ-இ)

## 31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்
13 . 12 . 1949

விண்ணில்
26 . 05 . 2025

(ஊராவில் காங்கேசன் துறையை பிறப்பிடமாகவும் கெசபதிமுத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், நடோசா கல்லூரியின் பழைய மாணவியும்) கடந்த (26.05.2025) அன்று காலமான எமது சகோதரி

### அமரர் அன்னேஸ்வரி சண்முகம்பிள்ளை

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தணை இன்று (25.06.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் (பிரான்சில்) நடைபெற்று தொடர்ந்து மதியபோசன நிகழ்வு நாளை மறுதினம் (27.06.2025) வெள்ளிக்கிழமை 2 Tue de fantante 77700 serris France என்னுமிடத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தணையிலும், மதியபோசண விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல், மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்க்கொத்து சாத்தியவர்களுக்கும், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல். பாஸ்கரன்
(+33 666 044 583)
பிரான்ஸ்

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23 . 07 . 1956

மறைவு
25 . 06 . 2022

### திருமதி. இராசலட்சுமி இராஜசேகரம்

(ஓய்வு நிலை உப அதிபர் யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

பேசி பேசி தினம் உம்மை எண்ணி
உங்கள் அன்பை அள்ளி வழங்குவதில்
நாயகியே !
பண்பை கூட பழக சொல்வீரே
நான்கு ஆண்டுகள் கடந்தும்
எல்லா சந்தோசம் கொண்டு வந்தது
போல்
போகும் போதும் எடுத்து சென்றீரே.

கணவர். சி. இராஜசேகரம், சகோதரிகள்,
மகள் நிவேதிகா, ஒன்றுவிட்ட அண்ணன்மார்,
மைத்துனிகள், உற்றார், உறவினர்கள்.

மாதகல் வடக்கு,
மாதகல்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## கலைமாணிப்பட்டப்படிப்பு (வெளிவாரி)


முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட
முதலாம் அரையாண்டுப் பரீட்சை
அணி-I 2013 / 2014 மற்றும் அணி-II 2016 / 2017
பழைய பாடத்திட்டம்

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஆடி மற்றும் ஆவணி, 2025 காலப்பகுதியில் நடாத்து வதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பரீட்சைக்கான விண்ணப்படிவத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் நேரடியாக அல்லது அதன் இணையத்தள முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்படிவமானது 05.07.2025 (சனிக்கிழமை) வரையிலான காலப்பகுதியில் காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 01.00 மணி வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாக சமர்ப்பிக்க முடியும்

மேலதிக விபரங்களுக்கு
**இணையத்தள முகவரி :** https://www.codl.jfn.ac.lk/
**தொலைபேசி இலக்கம் :** 021-222 3612
பதிவாளர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எம்மோடு
17 . 12 . 1947

எமைவிட்டு
26 . 05 . 2025

சுன்னாகம் புகையிரத வீதியை பிறப்பிடமாகவும் கந்தரோடை சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் பொன்னம்பலம் நித்தியானந்த வடிவேல் (சின்னத்தம்பி)

அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (25.06.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


உங்களின் முகமும், கனிந்த வார்த்தைகளும்
கனவாகிக் கரைந்தனவோ? மறக்கின்றன
எம் கனத்த இதயங்கள்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !!!

குடும்பத்தினர்.

(CS 58471) E-1

## 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
22 . 07 . 1967

மறைவு
27 . 05 . 2025

கடந்த 27.05.2025 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் மார்க்கண்டு அறிவழகன்

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி)

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (26.06.2025) வியாழக்கிழமை அதிகாலை 05.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கீரிமலை புனித தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரது பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், சமூக வலைத்தளம், அஞ்சலிப்பிரசுரம் மற்றும் பதாதைகள் மூலம் தமது அனுதாபங்களை பகிர்ந்தோருக்கும், இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர்கள், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு இந்நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

குடும்பத்தினர்.
0764276847

தேவரையாளி, நெல்லியடி வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தில்லைநாயகி கனகராசா (செல்லக்கிளி)



**தோற்றம்** **மறைவு**

**22.02.1939** **20.06.2025**

மண்டைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழடப்பாணம் வெள்ளாந் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாயகி கனகராசா அவர்கள் கடந்த (20.06.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - சிவக்கொழுந்து (மண்டைதீவு) தம்பதியரின் இளைய புதல்வியும், காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் - இராசம்மா (யாழ்ப்பாணம்) தம்பதியரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற கனகராசா அவர்களின் அன்பு மனைவியும், பசுமதி (மதி), ஜெயமதி (ஜெயா), வளர்மதி (வேவி), காலஞ்சென்ற மதிவண்ணன் (ராசன்) மற்றும் மணிவண்ணன் (செல்வன்), சுமதி (வவா) ஆகியோரின் அன்புத் தாயாரும், V.S. நடராசா, இராசம்மா, வேதவனம் (செல்லம்மா), தவசி, வேலுப்பிள்ளை, இராசரெட்ணம் (சின்னத்துரை), கணபதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஸ்ரீரஞ்சன், தவலிங்கம், ஜெயக்குமார், தனுஷியா, ஜெயச்சந்திரன் ஆகியோரின் மாமியாரும், பூபதி, செல்லத்துரை, நடராசா, கண்ணகை, நேசமணி, இராஜேஸ்வரி, புவனேந்திரன், பரமேஸ்வரி (தேவி), பத்மாசினி (சந்திரிகா), உதயகுமார் (உதயன்), செல்வமலர் (செல்லம்) ஆகியோரின் மைத்துனியும், சோபனா - அனு, செல்வி - தினேஸ், வர்ணா - தேவா, கௌதம், சுஜீனா, காலஞ்சென்ற கௌசிகா மற்றும் சரவணன், ஜெரீஸ், ஜெனிபர், ஜெவின், தருண்ராஜ், சந்தோஷ், வக்சிகா, நவீன், கீர்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கவீஸ், நிலானா, கிருத்திக், ஜெனா, அயேஸ், டுவைன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2025) வியாழக்கிழமை மு.ப 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

**ஜெயமதி (மகள்)**
**0049 176 820 25946**

**வளர்மதி (வேவி-மகள்)**
**076 744 1967**
**0046 7048 23231**

**113/13 காமல் வீதி,**
**வெள்ளாந் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

(CS/58833) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - யாழ்ப்பாணம்

### சிற்றுண்டிச்சாலை மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம், போன்றவற்றிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்த விலைமனுக்கோரல் 2025/2026

தலைவர். பிராந்திய பெறுகைக்குழு. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை சிற்றூண்டிச்சாலை. சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மற்றும் அச்சுவேலி வைத்தியசாலை சைக்கிள் பாதுகாப்பு நிலையம் என்பனவற்றுக்கு தகுதியான தகைமை வாய்ந்த நடத்துநர்களிட மிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | பெறுகை விபரம் | ஆகக் குறைந்த கேள்விப்பணம் (மாதாந்தம்) | பெறுகைப் பிணைப்பணம |
|---|---|---|---|
| BH/THL/Canteen/ 2025/2026 | சிற்றூண்டிச்சாலை - தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை (புற்றுநோய் விடுதி கட்டடத் தொகுதி முன்பாக) | ஐம்பதாயிரம் (50,000.00) | 10,000.00 |
| BH/ THL/Cycle Park/2025/2026 | சைக்கிள் பாதுகாப்பு நிலையம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை | இருபதாயிரம் (20,000.00) | 4,000.00 |
| BH/ACU/Cycle Park/2025/2026 | சைக்கிள் பாதுகாப்பு நிலையம் - அச்சுவேலி வைத்தியசாலை | எண்ணாயிரத்து ஐநூறு (8,500.00) | 2,000.00 |

01 பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. சுகாதாரக் கிராமம். பண்ணை. யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 0212226253. 0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் 25.06.2025 ஆம் திகதி முதல் 09.07.2025 ஆம் திகதி வரை வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரைப்பரிசீலிக்கமுடியும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேள்வி ஆவணங்களை மேற்படி முகவரியில் 25.06.2025 ஆம் திகதி முதல் 09.07.2025 ஆம் திகதி வரை வேலைநாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 2.000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.

04. பெறுகை ஆவணங்கள் 11.07.2025 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. சுகாதாரக் கிராமம். பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் 11.07.2025 அன்று காலை 10.00 மணிக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

05. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் அலுவலகத்தில் காசாக செலுத்தி அவ் ஆவணத்தின் பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

06. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பளார் பணிமனை
யாழ்ப்பாணம். 24.06.2025

## Invitation for Bids - 2025/06
## District General Hospital Kilinochchi
## Supply & Installation of Intercom System

1. The Chairman, Regional Procurement Committee (RPC) on behalf of the district General Hospital Kilinochchi now invites sealed bids from eligible and qualified bidders for below mentioned items
   1) Supply & Intallation of Intercom system
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure. (NCB)
3. Qualification requirements are indicated in section 4 of the Bidding document Addi tional details are provide in the schedule/Bidding Data & Contract Data (Section5)
4. Interested eligible bidders may obtain further information from address given below and inspect the bidding documents at the same place on any working days from 25-06-2025 to 08-07-2025 in between 09:00hrs and 15:00hrs
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Director of District General Hospital, A 9 Road, Kilinochchi. (T.P: 021 228 5329, Fax: 021 228 5327) from 09:00hrs to 15:00hrs. During the period from 25-06-2025 to 08-07-2025 upon payment of non refundable fees as mentioned in the table. The method of payment will be paid by cash at District General Hospital Office, Kilinochchi.
6. Bids (Original & Duplicate) should be handed over to the below address or depo sited in the tender box available in office at District General Hospital, Kilinochchi.on or before the closing time of bids 11.30AM of 09 of July 2025. Bids will be opened immediately after closing of bids in the presence of the bidders or their repre sentatives.
7. Pre bid meeting will be held on 03/07/2025 at 10.30am at Conference Hall, District General Hospital, Kilinochchi.
8. The Chairman reserves the right to accept or partially accept any bid and to annual the bidding process and reject all bids at any time without there by incurring any liabilitv to the bidders.

| Bid.No | Description | Qty | Non-Refundable Fee | Bid Security Amount | Bid Security Validity up to |
|---|---|---|---|---|---|
| NP/DGH/KOC/2025/PS DG/05 | Supply&Intallation of Intercom system | 1 | 2,000.00 | 80,000.00 | 05.10.2025 |

Further clarifications can be obtained directly from the Accountant of the District General Hospital,Kilinochchi(Tele. No. 021 228 4111 )

**Chairman**
**iRegional Procurement Committee**
**District General Hospital ,Kilinochchi.**

## வழமை போன்று விமான சேவைகள்

கொழும்பு, ஜூன் 25

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அனைத்து விமானசேவைகளும் வழமைபோல் இயங்கும் என இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அறிவித்துள்ளது.

தற்போதைய பிராந்திய சூழ்நிலைகள் காரணமாக சில விமா னங்களில் பயண தாமதங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், திட்டமிடப்பட்ட அனைத்து விமானங்களும் வழமைபோல் இயக்கப்படும் என சபை உறுதிப்படுத்தியுள்ளது. (ச-இ)

*We, the Principal, Staff & Students*
*of*
***St. John's College, Jaffna,***
*cordially invite*

*the Parents, Old Boys & Well-wishers*
*to*
***The Annual Prize Giving***
*to be held on*
*Saturday, 28th June 2025, at 9.00 a.m.*
*in the*
***Jubilee Hall.***
*We are honoured to have*

***Professor Sivamainthan Vithiananthan,***
*(Associate Professor of Surgery at Harvard Medical School and Chief of Surgery, Cambridge Health Alliance, Boston, U. S. A.)*
*accompanied by*
***Mrs. Shyamala Vithiananthan,***
*as our Chief Guest.*

## மரண அறிவித்தல்



### செல்வி.சரோஜினிதேவி தர்மலிங்கம்

**ஓம் சாந்தி ஓம் சாந்தி**
**எல்லாப் பிறப்பும் பிறந்து**
**இளைத்தேன் மெய்யே உன்**
**பொன் அடிகள் கண்டு வீடு**
**உற்றேன் (திருவாசகம்)**

செல்வி சரோஜினிதேவி தர்மலிங்கம். வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும். முன்னாள் உப அதிபரும் விளையாட்டுத் துறை, ஆங்கில ஆசிரியரும் சைவ மங்கையர் வித்தியாலய ஆங்கில ஆசிரியரும் ஆகிய அவர்கள் செவ்வாய் கிழமை அன்று **24-06-2025** இறைவன் திருவடிகளை அடைந்தார். அன்னார் திரு.திருமதி மா. தர்மலிங்கம் (55, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்) அவர்களின் புத்திரியும், காலஞ்சென்ற குலேந்திரன் (Bank officer) கணேசலிங்கம், மகேந்திரன் (ஜேர்மனி), ரோகிணி கவிராஜசேகரம் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். திருமதி ப.குலேந்திரன், திருமதி சொ.மகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும். பாசமிக்க பெறாமகன் திமத்தியின் (UK) பெரிய தாயாரும் மாதவி. பாலசங்கர், தமயந்தி. மீரா, கபிலன், தனுசன். ஆகியோரின் மாமியும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில், வியாழக்கிழமை **26-06-2025** காலை **8.00** மணியிலிருந்து பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் பிற்பகல் **12.30** மணியளவில் நடைபெற்று பிற்பகல் **2.30** மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல் :**
**ரோகிணி கவிராஜசேகரம் – 0771481714**
**திமத்தி கவிராஜசேகரம் – 0762746843**
**நா.ரட்ணகுமார் – 0716837602**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வலி.வடக்குக்...

உறுதிகளுடன் பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வலி.வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி, மயிலிட்டி சந்தியில் கடந்த சனிக்கிழமை முதல் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். போராட்டத்தின் நான்காம் நாளான நேற்று அவர்கள் காணிகளின் உறுதிகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
மயிலிட்டி, பலாலி, அன்ரனிபுரம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களும், கத்தோலிக்க மதகுருக்களும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினரும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். ஐந்தாவது நாளான இன்றும் அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். (அ-ம-26)

# தமிழர்களின் அபிலாஷைகளை குழிதோண்டிப் புதைத்த சங்கு!

## தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
மன்னார் மாவட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர், தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைத்தமைத்தமை, தமிழ் மக்களின் அபிலாஷைகளை குழிதோண்டிப் புதைக்கும் செயல் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கண்டனம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் தெரிவில் எங்களுக்குள் வேறுபாடுகள் இருந்த போதிலும் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் உள்ள எந்தவொரு சபையிலும் ஆட்சி அமைப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்பதில் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் தொடக்கம் முதலே ஓர் இறுக்கமான கொள்கைக் கோட்பாடாகக் கடைபிடித்து வந்திருக்கின்றன.
இந்தக் கோட்பாட்டை தமிழ் அரசுக் கட்சி வடக்கு கிழக்கு முழுவதும் எந்தப் பிசிறுமின்றிப் பின்பற்றி வந்திருக்கின்றது. இதுநாள் வரையில் ஏனைய தமிழ்க் கட்சிகளும்கூட அதனைப் பின்பற்றி வந்திருந்தன. ஆனால் இந்த அடிப்படைக் கோட்பாட்டுக்கு முரணாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் மன்னார் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைத்திருக்கின்றனர். இது உள்ளூராட்சி சபைகள் தொடர்பான தமிழ்க் கட்சிகளின் தொடக்ககாலக் கோட்பாட்டை முழுமையாக மீறும் செயல்.
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இந்த அணுகுமுறையை தமிழரசுக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. அவர்களின் இந்தச் செயல் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளுக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு முற்றிலும் முரணானது. 'கொள்கைக்கூட்டு' என்று முழங்கியவர்கள் இப்போது அடிப்படைக் கோட்பாட்டையே தகர்த்து தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்த்திருப்பது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் செயல் - என்றுள்ளது. (ம-26-125)

## யாழ்ப்பாணத்தில்...

டிருந்தன. எரிபொருள் போதியளவு இருப்பில் உள்ளது என்றும் தேவையற்ற வகையில் வரிசைகளை ஏற்படுத்த வேண்டாம் என்றும் பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் அறிவுறுத்தி வந்தனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எரிபொருள் இருப்பை உறுதிப்படுத்துவதற்காக கூடுதலான எரிபொருள்களும் அனுப்பிவைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்தே, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருந்த எரிபொருள் வரிசைகள் நேற்று நண்பகலுக்கப் பின்னர் இல்லாமல் போயுள்ளன.
இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் அமைதியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-17)

## புதைகுழிகளுக்கு...

வேண்டும் என்று வலியுறுத்தியும் யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் இன்று பெரும் போராட்டம் இடம்பெறவுள்ளது.
'மக்கள் செயல் அமைப்பின்' ஏற்பாட்டில், 'அணையா விளக்கு' என்ற தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.
போராட்டத்தின் இறுதி நாளான இன்றைய தினம் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த ஏராளமான அமைப்பினர், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் செயற்பாட்டாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோரின் பங்கெடுப்புடன் இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.
போராட்டத்தில் பங்கெடுப்பதற்காக பல வர்த்தக அமைப்புகள் இன்று கடையடைப்புத் தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ளன. அத்துடன் வெளிமாவட்ட மக்கள் போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு வசதியாக சிறப்பு போக்குவரத்து ஏற் பாடும் செய்யப்பட்டுள்ளது. (அ-ம-26-20-27)

## அகழ்வுப்...

விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, அகழ்வுப் பணிகளுக்காக நிதி விடுவிக்கப்பட்டுள்ள விடயமும், திட்டமிட்டபடி ஜூன் மாதம் 26ஆம் திகதியன்று (நாளை) அகழ்வுகளை மேற்கொள்வதில் எந்தத் தடங்கலும் இல்லை என்றும் நீதிமன்றத் துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில், கடந்த பெப்ரவரி மாதம் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அண்மையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. மூன்று குழந்தைகளின் மனிதச் சிதிலங்கள் உட்பட 19 மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட நிலையில், அந்தப் புதைகுழி மனிதப் புதைகுழியாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது. 'மனிதப்புதைகுழி' என்ற அடையாளப்படுத்தலுக்கு அமைய இனி அகழ்வுப் பணி தொடரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பதில்...

மார்க்கண்டு நடராசா என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றுக்காக தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதியிட்ட சத்தியக் கூற்றொன்றைச் சமர்ப்பித்துள்ளார். அதிலேயே, அவர் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலராக ப.சத்தியலிங்கத்தின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார்.
தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் பெயர் குறிப்பிடப்பட்டு, அவர் கட்சியின் பல்வேறு ஆவணங்களில் பதில் பொதுச்செயலாளர் என்ற வகையில் கையொப்பமிட்டும், கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகின்ற நிலையிலேயே, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளராக ப.சத்தியலிங்கம் தற்போதும் தொடர்கின்றார் என்று கட்சியின் பதில் தலைவரான சி.வீ.கே.சிவஞானம் நீதிமன்றத்துக்கு சத்தியக்கூற்றை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தீயில்...

(வயது-69) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வீசிய கடும்காற்றின்போது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. இதனால், மெழுகுதிரியை ஏற்றிவைத்தபோது அது தவறிவீழ்ந்து எரிந்துள்ளது. இதன்போது காயமடைந்த அவர் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-27)

## அகில...

ஜப்ரான் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
மன்னார் பிரதேசசபையின் முதலாவது அமர்வு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.
தவிசாளர் தெரிவுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் கிறிஸ்ரி றெவல், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பில் ஏ.ஜே.எம்.ஜப்ரான் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டன.
பகிரங்கமாக நடைபெற்ற வாக்கெடுப்பில் 13:09 என்ற அடிப்படையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைத்துள்ளது. உபதவிசாளராக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் இஸ்மாயில் மொஹமட் இஷதீன் தெரிவானார். (அ-ம-60-56)

## மாந்தை...

பிறேம்குமார் தெரிவுசெய்யப்பட்டார்.
மாந்தை மேற்கு பிரதேசசபையின் முதலாவது அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.
தவிசாளர் தெரிவுக்காக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஞானப்பிரகாசம் பிறேம்குமாரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் செபமாலை கமலச்சந்திரனும் முன்மொழியப்பட்டனர்.
சபையின் 21 உறுப்பினர்களில், ஓர் உறுப்பினர் அமர்வில் கலந்துகொள்ளவில்லை. ஏனைய 20 உறுப்பினர்களும் வாக்களித்த நிலையில் 15:05 என்ற அடிப்படையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஞானப்பிரகாசம் பிறேம்குமார் வெற்றிபெற்றார்.
உபதவிசாளராக தேசிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் நிஸாம் நிஜாத் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார். (அ-ம-56)

## மன்னார்...

வசந்தன் தெரிவுசெய்யப்பட்டார். மன்னார் நகரசபையின் முதலாவது அமர்வு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர்தேவந்தினிபாபுவின்முன்னிலையில் நேற்று நடைபெற்றது.
தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் அன்ரனி டேவிட்சன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் டானியல் வசந்தன் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டன.
16 உறுப்பினர்களைக் கொண்ட சபையில், ஓர் உறுப்பினர் அமர்வில் கலந்துகொள்ளவில்லை. இன்னொரு உறுப்பினர் நடுநிலை வகிப்பதாக அறிவித்தார். 8:6 என்ற அடிப்படையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் டானியல் வசந்தன் வெற்றிபெற்றார். உபதவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நூர் மொஹமது மொஹமது உசன் தெரிவானார். (அ-ம-56)

## யாழ்ப்பாணத்துக்கு...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், நான்கு நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் இலங்கைக்கு வந்திருந்தார். பிரதமர் ஹரிணி, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடிய அவர், தனது பயணத்தின் பிரதான அம்சங்களில் ஒன்றாக இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.
வோல்கர் ட்ரக்கின் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தின்போது, அவர் செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடவேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் வலியுறுத்திவருகின்றனர். மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று ஸ்ரீலங்கா அரசாங்கமும் தெரிவித்துள்ளது. இதனால், அவர் இன்று செம்மணி மனிதப் புதைகுழிக்குச் செல்ல வாய்ப்புள்ளது எனக் கருதப்படுகின்றது.
அத்துடன், வடமாகாண ஆளுநர் வேதநாயகன், தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட தரப்பினருடனும் வோல்கர் ட்ரக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார் என்றும் தெரியவருகின்றது. மனித உரிமைகள் ஆணையாளர் நாளை இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட்-யாழ்ப்பாணம்
**I.C.T**
**PAPER CLASS**
**A/L - 2025**
MR T.சுதர்ஷன்
(BiT, HNDIT, HNDE, PGIDE, MED)
(வளவாளர் கணினி வளநிலையம்
யாழ் கல்வி வலையம்-யாழ்ப்பாணம்.
ஆரம்பம் - 25.06.2025 புதன்
3.15-5.30 மணி வரை
Note - A/L 2027, 2026, 2025 சனி, ஞாயிறு பிரிவுகள் நடைபெறுகின்றன.
தொடர்பு: 077 376 3511

**காணி விற்பனைக்கு**
கொழும்புத்துறையில் 1 1/4 பரப்பு வீடு கட்டுவதற்கு ஏற்ற காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 485 6607

**ஆண் வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு 18 - 50 வயதுடைய ஆண் வேலையாட்கள் தேவை
தங்குமிடவசதி செய்து தரப்படும்
மாதச்சம்பளம் - 50000/-
(அடிப்படைச் சம்பளம்)
தொடர்பு: 077 937 0000
075 988 1000

# ஈரான் மீதான தாக்குதலுக்கு அமெரிக்காவுக்குள் எதிர்ப்பு

நியூயோர்க், ஜூன் 25

இஸ்ரேல் - ஈரான் போரில் அமெரிக்கா இணைந்துகொண்டுள்ள நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூயோர்க்கில் ஒரு தொகையினர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரான்மீது நடத்தப்படும் போரை நிறுத்தவும், ஈரானைத் தொடாதே, ட்ரம்ப் ஒரு போர் குற்றவாளி போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு இந்த ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஈரான் மீதான தாக்குதல் மற்றும் காஸாமீது நடத்தப்பட்டுவரும் தாக்குதல் ஆகிய வற்றைச் சுட்டிக் காட்டி இஸ்ரேலுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

அதேவேளை, வெள்ளை மாளிகைக்கு அருகிலும் போராட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(ஏ-இ)

**வெல்டிங் வேலையாள் தேவை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை
மதிய உணவு வழங்கப்படும்
சம்பளம் : நாள் ஒன்றிற்கு 5,000/=
மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
077 937 0000, 075 988 1000

**காணி விற்பனைக்கு**
நாவற்குழியில் 32 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: 076 116 9588
whats app 0041 7628 68686

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.
தொடர்பு:-
Whatsapp:- 0044 740 537 3526
(CS/58593) J-1

**பிரதேச வைத்தியசாலை சங்கானை**
**நோயாளர் நலன்புரிச் சங்கம்**
மேற்படி எமது சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபை தெரிவும் இடம்பெறவுள்ளது.
**காலம் :- 06.07.2025 ஞாயிறு**
**நேரம் :- மாலை 3.00 மணி**
**இடம் :- வைத்தியசாலை கேட்போர்கூடம்**
இதில் சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
**செயலாளர்**
(CS/58666) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 01 . 1947



மறைவு
23 . 06 . 2025

**திருமதி சண்முகம் நாகலட்சுமி**

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் நாகலட்சுமி அவர்கள் கடந்த (23.06.2025) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-நாகரத்தினம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், சுதாகர் (லண்டன்), தினேஸ் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வேணுகாவின் அன்பு மாமியாரும், ஹரிஷ், கேஷவி ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், ஜெயபாலசிங்கம் (ஜேர்மனி), இராஜலக்ஷ்மி (லண்டன்), பிறேமாவதி (கொடிகாமம்), புவனேஸ்வரி (முழங்காவில்), தனபாலசிங்கம் (முழங்காவில்), ஜெகதீஸ்வரன் (தெல்லிப்பளை), கமலினி (முழங்காவில்), காந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் தருமலிங்கம் (ஜெயாகோட்டல்-வவுனியா), தங்கமலர், பராசக்தி, பூமணி, திருநாவுக்கரசு (யசோதா ஹோட்டல்-வவுனியா), சுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்ககாக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
மருத்துவபீடம் முன்பாக,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
ச.சுதாகர் (மகன்)
ச.தினேஸ் (மகன்)

## முதலாம் ஆண்டு நினைவுகள்

தோற்றம்
10 . 09 . 1989



மறைவு
20 . 05 . 2024

**அமரர் தியாகராசா தயானன்**

காலஞ்சென்றவர்களான செல்லர் - பாக்கியம் மற்றும் கதிரித்தம்பி - பூரணம் தம்பதியரின் பேரனும் தியாகராசா - பாலரஞ்சினி தம்பதியின் மகனும், கதிரமலை-ஞானேஸ்வரி தம்பதியின் மருமகனும், சிந்துஷாவின் கணவரும், அஸ்வந், அஸ்திரன் ஆகியோரின் தந்தையும், Bala Enterprises இன் உரிமையாளரும் ஆவார்.

அளவெட்டிக் கிராமத்தில் நம்பிக்கையோடு
அளவிட முடியா நட்பு வட்டங்கள் கொண்ட நீ
சொந்தங்களோடு உன் துணைவி, பிள்ளைகளையும்,
குடும்ப உறவினர்களையும் கலங்க விட்டு, சென்று
ஆண்டு ஒன்றாகி விட்டதைய்யா!
"தயானன்" உன் நினைவுகள் இன்னும் தவறாமல்
ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் அகத்தில் எண்ணத்
தோன்றுதைய்யா!
கணேசன் கணபதியின் பாதம் அடைந்து சாந்தி பெற
கஜமுகனாம் விநாயகனை பணிந்து உன் ஆத்மா சாந்தி
பெறவே தொழுகின்றோம்.

அளவெட்டி
கணேஸ்வரம்.

குடும்பத்தினர்
077 652 3229

(CS/58668) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org